# யாழ்நாதம்

இதழ் 24 2022/2024



வெளியீடு

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்

கொழும்பு

"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்க வேண்டும்."

"It ought to be beautiful, I live here."

# யாழ்நாதம்

இதழ் 24 2022–2024

## பொருளடக்கம்


1. கல்லூரிக் கீதம் 2
2. மலராசிரியரின் மனதில் மலர்ந்தவை 3
3. மன்றத்தலைவியின் வாழ்த்து 5
4. புராண படனமும் திருமுறை ஓதுதலும் 7
5. சித்தி தரும் சித்த மருத்துவம் 23
6. புரிதலும் தெளிதலும் 29
7. மகாதேவ ரகசியம் 33
8. அறம் 35
9. கண்ணப்பரின் பெருமை 38
10. சமயங்களின் தத்துவம் 48
11. நம்பியாண்டார் நம்பியின் பங்களிப்பும் சேக்கிழார் விரிநூலும் 50
12. மண்ணின் தேவதைகள் 55
13. சிந்தை மகிழ வைத்த சீர்காழி கோவிந்தராஜன் 58
14. வாழ்க்கைத் தத்துவம் 62
15. வைரவக்கடவுளின் சிறப்புக்கள் 66
16. தேன் குடம் 70
17. SAI BABA 72
18. பசுமை நிறைந்த நினைவுகள் 73
19. கொரோனா வைரஸ் 77
20. எமது பிறப்பின் பெருமை 79
21. அருள்மிகு வடிவாம்பிகை - அனுபவப் பாடல்கள் 81
22. அஞ்சலி திருமதிகள் :-
    (1) தயாநிதி செல்வநாயகம் 83
    (2) புவனேஸ்வரி யோகலிங்கம்
    (3) பத்மா சோமகாந்தன்
23. Vishaleni Umaakajan's Performances in Chess. 84
25. நன்றி சொல்ல வேண்டும் 87


வெளியீடு

**யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு.**

# கல்லூரிக் கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி - எங்கள்
பெருவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி - இயல்
சிந்தை வளம்பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் இலட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

# மலராசிரியரின் மனதில் மலர்ந்தவை...

யாழ்/இந்து மகளிர் கல்லூரியில் கல்விச் செல்வம் பெற்று, இன்று கொழும்பிலே, சிறப்பாக வாழும் இந்து மகளிரின் பழைய மாணவிகளின் படைப்பே இந்த யாழ் நாதம் ஆகும். இதன் நாதம் என்றுமே சுருதியில் குறைந்ததுமில்லை. குறையப் போவதுமில்லை. காரணம், எல்லாம் வல்லவனும் எம் பெருமானுமாகிய தில்லைக்கூத்தனதும், எமது பாடசாலை வளாகத்துள்ளே அமர்ந்து, ஆங்கு அருளாட்சி நடாத்தும் இராஜவரோதயப் பிள்ளையாரினதும் இன்னருளே ஆகும்.

ஒருவர், வாழ்க்கையில் முன்னேற வேண்டுமேயானால், அவர் சகல வசதிகளுடனும் மிளிர வேண்டுமேயானால், அவர்கட்கு கல்விச் செல்வம் அவசியம். அன்றாடம் நாம் பேணும், பேண வேண்டிய, அன்பு, பண்பு, முயற்சி, ஐக்கியம், புரிந்துணர்வு, பக்தி, விவேகம் அத்தனையையும் எமக்கு அளிப்பது நாம் கற்ற கல்வி அறிவேயாகும். இத்தகைய பெரும் செல்வத்தை எமக்கு இளமை தொட்டு ஊட்டி வளர்த்த எம் அன்னையே, யாழ்/இந்து மகளிர் கல்லூரி. இவ் அன்னைக்கு எமது அர்ப்பணிப்பே “இந்த யாழ் நாதம்” சஞ்சிகை. இச் சஞ்சிகை, கலைகளில் ஓவியமாய், காற்றிலே தென்றலாய், மலர்களில் மல்லிகையாய், மாதங்களில் மார்கழியாய், சுவையுடன் இனிய நாதம் பரப்பி எமையெல்லாம் மகிழ்விக்க, காலந்தோறும் வெளிவர வேண்டும் எனக் கலைத் தாயை வேண்டுகின்றேன்.

மேலும் இச் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு, எனக்குப் பல்வேறு உதவிகளைப் புரிந்து ஆக்கமும் ஊக்கமும் காட்டி வரும், என்றும் என் அன்பிற்குரிய, ஆளுமை மிக்க, எமது மன்றத் தலைவி, திருமதி. அபிராமி கைலாசபிள்ளை அவர்களை இவ்விடத்தில் நன்றியோடு, குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். அத்தோடு அழைத்த போதெல்லாம் எனை நாடி வந்து, இச் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உதவிக் கரம்

நீட்டும், எமது மன்றப் பொதுச் செயலாளர் திருமதி. மிதிலைச் செல்வி ஸ்ரீ பத்ம நாதன் அவர்கட்கும் நன்றி சொல்லித்தான் ஆக வேண்டும். அத்தோடு எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு மனமுவந்து தம்மால் முடிந்தவரை நல்லாதரவு நல்கும் எமது கொழும்புக்கிளை மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும், யான் கேட்டதற்கிணங்க தமது பொன்னான நேரத்தையும், சிரமத்தையும் பார்க்காது, சஞ்சிகைக்கு, மலர்ந்த முகத்துடன், நல் ஆக்கங்களைத் தந்துதவிய அனைத்து சான்றோர்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகப் பெருந்தகைகளுக்கும், இச் சஞ்சிகையின் அச்சுப் பிரதியைச் சரி பார்க்க உதவிய நல்லுள்ளங்கட்கும், இவ்விதழை அழகாக அச்சிட்டுத் தந்த “யுனி ஆர்ட்ஸ்” நிறுவனத்தார்க்கும், இச்சந்தர்ப்பத்தில், எனது மனம் நிறைந்த, உளம் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி
வணக்கம்.

நூலாசிரியர்

**திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு**

பழைய மாணவி, யாழ்/இந்து மகளிர் கல்லூரி

முன்னாள் அதிபர், யாழ்/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.

# மன்றத் தலைவியின் வாழ்த்து

யாழ் நகரில் பிரசித்தி பெற்ற பெண்கள் பாடசாலைகளில் ஒன்றான எமது யாழ் இந்து மகளிர் கல்லூரி அண்மைய ஆண்டுகளில் மேலும் ஒரு படி முன்னேற்றம் கண்டு கல்வி, விளையாட்டு, கலை நிகழ்வுகளில் பிரகாசித்து வருகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது. இந்து மத தமிழ் பாரம்பரியங்களை சிறப்புடன் தொடர்வதில் இன்னும் பெருமை கொள்கிறது இக் கல்லூரி.

யாழ் நாதத்திற்கு இன்று வயது 24. இந்த வயதினில் இளமைத் துடிப்புடன் அது வாசகர்களாகிய உங்கள் கையில் தவழவந்துள்ளது. யாழ் நாதம் சஞ்சிகை எமது கல்லூரியின் பழைய மாணவிகளை வாசிக்கவும் எழுதவும் தூண்டியுள்ளது இது ஒரு சாதனை என்று தான் சொல்ல வேண்டும்.......

இலட்சியத்தோடு கூடிய சகல பெண்களினதும் இலக்கிய வீச்சுக்கு யாழ் நாதம், களம் அமைக்க காத்திருக்கிறது. ஆழமான சிந்தனையைச் செயற்படுத்தி எழுதுங்கள். இந்த சஞ்சிகை எமது கல்லூரியின் புகழ் பாடும் ஒரு ஆவணம் என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். தேடலுக்குத்தீனி கிடைத்தால் உடனே பேனாவுக்கு வேலை கொடுங்கள். நம் மொழி வளர எழுத வேண்டும். புதிது புதிதாக இளம் எழுத்தாளர்கள் தோன்ற வேண்டும் என்பது எமது அவாவாகும்.

இக் கல்லூரி தொடங்கிய காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் இந்து மாணவிகளுக்கென்று ஒரு கல்லூரி இல்லையே என்ற குறையை இக்கல்லூரி நிரப்பி உள்ளது. அன்றிலிருந்து தொடர்ச்சியாகக் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் ஆர்வமுள்ள பெற்றோர்கள் நலன் விரும்பிகள் ஆகியோரும் இணைந்து ஆற்றிய பணிகளினால் கல்லூரி ஸ்தாபகர்களின் கனவை நனவாக்கி யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் இந்து மாணவிகளுக்கு அளப்பரிய

சேவை செய்யும் ஒரு தாபனமாக இப்போது வளர்ந்துள்ளது எமது கல்லூரி.

எமது கல்லூரியின் பழைய மாணவிகள் எல்லோரும் எமது பழைய மாணவிகள் சங்கத்தில் சேர்ந்து தமது கல்லூரிக்காகப் பாடுபட வேண்டும் என்பதே எனது விருப்பம். இறைவன் அருளாலும் சங்க அங்கத்தவர்கள் திறமையாலும் இது சாத்தியமாகும் என எதிர்பார்க்கிறேன். யாழ் நாதம் மலர் ஆசிரியைக்கும், இம்மலர் வெளிவர உதவியவர்களுக்கும் எனது நன்றியும் வாழ்த்துக்களும். அத்துடன் இம்மலரை சிறப்புற அச்சிட்ட யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்திற்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

**திருமதி அபிராமி கைலாசபிள்ளை**
மன்றத்தலைவி

# புராணபடனமும் திருமுறை ஓதுதலும்

சைவநாற்பாதங்களாவன சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். இவற்றில் முதலாவதான சரியை என்பது "அன்பின் துணையோடு உடம்பினால் செய்யும் இறைபணிகள்" என்பதாகும். இலகுவில் செய்யக்கூடிய இந்நெறியில் நிற்போர் சிவனை ஆண்டானாகவும் தம்மை அடியவர்களாகவும் கொள்ளும் தாசமார்க்கந்தனைக் கடைப்பிடிப்பவர்களாவார். இந்நெறி நிற்போர் சாலோக முத்தியைப் பெறுவர்.

இந்நெறி முறையில் புராணபடனம் செய்தல், திருக்கதைகள் கூறல் மற்றும் இறைவன் புகழ்பாடுதலாகிய திருமுறை முற்றோதல், பஞ்சபுராணம்ஓதுதல்ஆகியனபற்றிமிகச்சுருக்கமாகஇங்குபார்ப்போம். இவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த தன்மைகளைக் கொண்டவையாகவும் ஒரே முறைமைகளைக் கொண்டவையாகவும் நடைமுறையில் காணப்படும் போதும் அவற்றைத் தனித்தனியே இங்கு பார்ப்பது சிறந்ததென்று எண்ணுகின்றேன்.

**"புராணபடனம்"**

முதலில் புராணபடனத்தின் மூலவேரை சற்று விரிவாக நோக்குவோமாயின் (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையோரால் வெளியிடப்பட்ட "கந்தபுராணம்" நூலின் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் அணிந்துரையின் ஒரு பகுதியை, காலத்தின் தேவை கருதி சிறுமாற்றத்துடன் அப்படியே தருதல் சாலச்சிறந்தது என எண்ணுகின்றேன்.)

"கந்தபுராணத்துக்குப் பிறப்பிடம் கந்தசுவாமியின் திருவருள் பெருகும் காஞ்சிமா நகரமேயாகினும், அதனைப் பிள்ளைப் பருவத்திலிருந்தே பேணுகிற முறையிற் பேணி வளர்த்தெடுக்கும்

தலவிசேடம் படைத்தது இலங்கை. சிறப்பாக யாழ்ப்பாணம். இங்கு கோயில்கள் தோறும் சுவாமி சந்நிதியில் சந்நிதி விரோதமின்றி மிக்க பயபக்தியுடன் புராணபடனம் நிகழ்த்தும் முறை வேறு எங்கும் காணாதது.) இம்முறையின் வரலாறு சிந்திக்கற்பாலது.

இலங்கையின் சிரத்தானம் யாழ்ப்பாணம். இதன் ஆதிப்பெயர் மணற்றி. இதனை முதலாண்ட தமிழரசன் யாழ்ப்பாணன். பாணருக்கு யாழ் கை வந்தது. யாழ்ப்பாடி என்றும் அவன் பெயர் வழங்கும் அவனது இயற்பெயர் வீரராகவன். (அந்தகக்கவி வீரராகவன் வேறு. அந்தகன் - குருடன். பிற்காலத்தவன்). வீரராகவன் எனப் பெயரிய யாழ்ப்பாணன் கண்டியிலிருந்த அரசன் ஒருவனை இன்னிசையால் மகிழ்விக்க (இனிமை செய்ய) அக்கண்டி அரசன் உவந்து யாழ்ப்பாணனுக்கு அளித்த பரிசில் மணற்றி. இம்மணற்றி கண்டியரசனுக்கு மாதா வழிச்சொத்து.

மாதா மாருதப் புரவீகவல்லி. விக்கிரம சோழன் புதல்வி. மாமுகத்தி, அதாவது குதிரைமுகம் கொண்டவள். இவள் பல தலங்களுக்கும் யாத்திரை சென்று இறுதியாக நகுலாசலம் எனப்படும் கீரிமலைக்கு வந்து சேர்ந்தாள். அங்கே தவஞ்செய்து கொண்டிருந்த கீரிமுக முனிவரான நகுலமுனிவரின் அநுக்கிரகம் பெற்று கீரிமலைத் தீர்த்தத்தில் மூழ்கியதும் மாமுகம் விடுபட்டு அழகிய முகத்துடன் கூடிய அரசிளங்குமரியாயினாள். மாமுகம் விட்டதன் ஞாபகமாக மாவிட்டபுரத்தை அமைத்து கோயிலெடுத்துக் கோயிலில் என்றும் இளையோனான திருமுருகனைப் பிரதிட்டை செய்தாள். முக அழகியாய் மாறிய அவளைப் பாலசிங்கன் என்னும் அரசன் மணந்து பெற்ற புதல்வனே கண்டியரசன்.

இனி, மணற்றிக்கு வருவோம். பல்வேறு மக்களை அழைத்து வந்து குடியேற்றஞ் செய்து மணற்றியை ஆளத்தொடங்கினான் யாழ்ப்பாடி. அழைத்து வந்தவர்களுள் முக்கியஸ்தர் ஒருவர். அவர் கச்சிக் கணேசையர். அவருடன் மேலும் முக்கியமானதொன்றும் குடியேறியது. அது கந்தபுராணம். கச்சிக்கணேசையரும் யாழ்ப்பாடியும் கச்சியப்பசிவாசாரியாரோடு ஒன்றாய்ப் படித்தவர்களாகலாம். அன்றி கந்தபுராண அரங்கேற்றத்தில் பங்கு பற்றியிருப்பார்கள் என்றும்

ஊகிக்கலாம். கச்சியப்பசிவாசாரியார் காலத்திலேயே கந்தபுராணம் யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்டது.

இங்கே கோயிற் சந்நிதியில் புராணபடனம் நடத்தவேண்டியிருந்ததால் சந்நிதி விரோதமின்றி புராணபடனம் நடத்தும் முறையை கச்சிக்கணேசையரும் யாழ்ப்பாடியும் கலந்துரையாடி வகுத்திருக்கலாம். அரியாலைச் சித்திவிநாயகர் ஆலயத்திற்தான் முதன் முதலில் இந்தப் புராணபடனத்தை கச்சிக்கணேசையர் ஆரம்பித்தார் என்று சொல்லுவதுமுண்டு.

இப்படியாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலே அரியாலையில் ஆரம்பித்ததாகக் கூறப்படும் புராணபடன மரபு இன்றும் ஓரளவு தீவு முழுவதும் பரந்து கொழும்பு உட்பட்ட பல பிரதேசங்களிலும் சிறந்து விளங்குகின்றது எனலாம்.

புராணபடனம் செய்வதற்கு உகந்த இடங்களாகத் திருக்கோயில், திருமடம், புண்ணிய தீர்த்தக்கரை, சமயாசார சீலருடைய இல்லம் போன்றவையை சைவ வினாவிடையில் நாவலர் பெருமான் குறிப்பிடுகின்றார்.

“புராணபடனம்” எனப்படுவது புராணங்களை நியமமாக, விதிப்படி படித்தலும், அவைகளுக்குப் பொருள் சொல்லலும் கேட்டலும் எனலாம். இதற்கு புராணத்தினைப் படிப்போர் மற்றும் அவற்றிற்குப் பொருள் சொல்வோர் என இருசாராரின் பங்களிப்பு இன்றியமையாததாகின்றது. புராணபடனத்தினை சுபதினத்திலே ஆரம்பித்து சுபதினத்திலே நிறைவுசெய்வது சிறந்தது. அதுவே நடைமுறையிலுமுள்ளது.

(ஆரம்பிக்கும் தினத்திலும் நிறைவு (பூர்த்தி) தினத்திலும் புராணமண்டபத்தை (பீடத்தை) பட்டுமேற்கட்டி வாழை கரும்பு கொண்டு அலங்கரித்தல் நன்று. அதே போன்று புராணபடன நிறைவு தினத்தில் புத்தகபூஜை நடைபெற்று புராணநூல் பூஜைக்கு வைக்கப்பட்டு வாத்திய இசையுடன் வீதி வலம் வந்து புராணத்தை ஆலயத்துட் கொண்டு செல்வர். அதற்குப் பின் உபயகாரருக்கு காப்புக்கட்டும் புராணபடனஞ் செய்தோருக்கு காணிக்கை செலுத்துதலும் நடைபெறும். பூர்த்தி தினத்திலும், திரு அவதாரம்,

திருக்கல்யாணம் முதலிய விசேட நிகழ்ச்சிகளிலும் இயன்ற அளவு விசேட ஆராதனை அன்னதானம் நடைபெறுவது சாலச்சிறந்தது.)

புராணபடனம் அல்லது படிப்பு பெரும்பாலும் சுபநாளில் ஆரம்பித்து மூன்று மண்டலம் (கந்தபுராணம்), ஒரு மண்டலம் (ஒரு மண்டலம் நாற்பத்தெட்டு நாட்கள்) நாற்பது நாட்கள் (பெரியபுராணம்) தொடர்ந்து, மகோற்சவ கால ஆரம்பத்தோடு நிறைவு செய்யப்படுவது வழமை. அதுதவிர விசேட காலங்களில் அந்தந்த நிகழ்வுகளோடு தொடர்புபட்ட புராணங்கள் படிக்கப்படுவது வழமை. ஐப்பசி மாதத்து கந்தசஷ்டி காலத்தில் கந்தபுராண சூரபன்மன் வதைப்படலம், கதிர்காமத் திருவிழாக் காலங்களில் கந்தபுராண வள்ளியம்மை திருமணப்படலம், கந்தபுராண தெய்வயானை திருமணப் படலம், மார்கழி திருவெம்பாவை காலத்தில் திருவாதவூரடிகள் புராணம், பிட்டுக்கு மண்சுமந்த சருக்கம், விநாயக சஷ்டி பெருங்கதை காலத்தில் பிள்ளையார் புராணம், மார்கழி மாத ஏகாதசி காலத்தில் ஏகாதசி புராணம், திருவிளையாடற்புராணம் போன்றவையும் படிக்கப்பட்டு வருகின்றன.

இவ்விடத்தில் புராணத்தினைப் படிப்போரும் அவற்றிற்குப் பொருள் சொல்வோரும் சில ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென நாவலர் நவின்றுள்ளார். அவர்கள் கல்வியறிவுள்ளவர்களாகவும் சிவபக்திமான்களாகவும், சைவாசார சீலர்களாகவும், சமய தீட்சை பெற்றவர்களாகவும், புலாலுண்ணாதவராகவும் இருத்தல் அவசியம். குறைந்தபட்சம் புராணபடனம் நடைபெறும் காலங்களிலாவது சைவாசார சீலர்களாக இருப்பது அவசியம். இவர்கள் புராணபடனம் செய்யும்போது சரீரசுத்தி செய்து அநுட்டானம் பண்ணி தோய்த்துலர்ந்த வஸ்திரம் அணிந்து (ஆண்கள் வேட்டியும் அதன்மேல் இடுப்பில் சால்வையும், பெண்கள் ரவிக்கையும் சேலையும்) தலையை சீராக வாரி முடித்து வீபூதி உருத்திராக்கம் போன்ற சிவசின்னங்கள் அணிந்து இருப்பது அவசியம். சிவ சிந்தனையும் தாங்கள் இறைவனுக்கு சரியைத் தொண்டு செய்யும் அடியார்கள் என்ற எண்ணமும் எப்போதும் மனதில் இருக்க வேண்டும்.

நாள்தோறும் புராணமண்டபத்தை சுத்தம் செய்து கழுவி அதன்மேல் பீடத்தை வைத்து பட்டு விரித்து, அதன்மேல் புராணத்தையோ திருமுறையையோ வைத்து சந்தனம், புஷ்பம், தூ பம் தீபத்தினாலே விதிப்படி பூஜை செய்து நமஸ்கரித்து ஆலய அந்தணர் காப்புச் செய்யுளைப் படித்து புராணபடனத்தைத் தொடக்கி வைப்பர். காப்புச் செய்யுள் தோடி, காம்போதி, பைரவி, நாட்டை இராகங்களிலே ஆரம்பிப்பது மரபு. புராணத்தினை பீடத்திலே வைத்து அதனையும் அதனது ஆசிரியரையும் அருச்சித்து உட்கார்ந்து வாசித்தல் வேண்டும். புராணத் திருமுறையை பீடத்திலன்றி தரையிலேனும் மடியிலேனும் வைக்கலாகாது. திறந்த நிலையில் வைத்து விட்டுச் செல்லுதல் ஆகாது.

புராணபடனம் நடைபெறும் போது பாடலைப் படிப்பவர் சந்நிதானத்தின் வலது பக்கத்தில் வடக்கு நோக்கி அமர்ந்து ஒரு தடவை ஒரு பாடலை முழுமையாக வாசித்து மறுதடவை பதச்சேதம் செய்து கொடுக்க பொருள் கூறுபவர் சந்நிதானத்திலே கிழக்கு முகமாக அமர்ந்து விரித்துரைப்பர். இவ்வாறு பொருள் விரித்துக் கூறுதல் பயன் சொல்லுதல் எனப்படும். புராணத்தை வாசிப்பவர் சபையோர் யாவரும் கேட்கும் வண்ணம் தெளிவாக வாசித்தல் வேண்டும். வாசிக்கும் காலத்திற்கும் எடுத்துக் கொண்ட விடயத்தின் தன்மைக்கும் ஏற்ற இராகத்தில் வாசித்தல் நன்று. இசையுடன் வாசிக்காது விடினும் சொற்பிழை எழுத்துப்பிழையின்றி தெளிவாக யாவருக்கும் கேட்கும் படியாக வாசித்தல் இன்றியமையாதது. அதே போன்று எச்சுருதியில் எவ்விராகத்தில் வாசிக்கப்படுகின்றதோ அச்சுருதியில் அவ்விராகத்தில் பொருள் சொல்லல் மிகச் சிறந்தது. பொருள் சொல்பவர் முதலில் பதப்பொருள் சொல்லுதல் வேண்டும். பின்னர் தமது வித்துவ ஆற்றலுக்கேற்ப பொழிப்புரை, விசேடவுரை, விருத்தியுரை, அலங்கார உரை, தத்துவ உரை என்ற வகையில் மெருகூட்டலாம். எது எப்படி இருந்தபோதும் வாசிப்பவர் எழுத்துப்பிழை சொற்பிழை இன்றியும் பொருள் கூறுபவர் இலக்கணவழு இல்லாதபடிக்கும் கேட்பவர்கள் எல்லாருக்கும் எளிதில் விளங்கும் படியும் சொல்லுதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டோர் பங்குபற்றுமிடத்து வலப்புறம் இருப்பவர் எனத் தொடர்வதே முறை, முதலில் படித்தவர் நிறுத்தும் பொழுது பாடலை வாசித்து வலது புறமாக அடுத்தவரிடம் புராணத்தைக் கொடுப்பார். அவர் மீண்டும் அதே பாடலை வாசித்து பின் பதச்சேதம்

செய்து கொடுப்பார். ஆரம்பிக்கும் பொழுதும் மற்றவரிடம் கொடுக்கும் பொழுதும் திருச்சிற்றம்பலம் என்றும் கூறவேண்டும். அன்றைய படனம் நிறைவுறும்போது இறுதியாக பாடலை வாசித்து விட்டு காப்புச் சொல்லி நிறைவு செய்வர். அடுத்த தினம் காப்புச் சொல்லி அதே பாடலை மீண்டும் வாசித்து தொடருவர். காப்புச் சொல்லும் பொழுது மற்றைய அனைவரும் அஞ்சலி செலுத்துதல் வேண்டும்.

அதேபோன்று கேட்பவர்களும் ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து நித்திய கருமம் முடித்துக் கொண்டு புராணத் திருமுறையை நமஸ்கரித்து இருந்து கொண்டு பிறிதொன்றிலும் கருத்தை ஈடுபடுத்தாது சிரத்தையோடு கேட்டல் வேண்டும்.

புராணம் படிக்கும் சபையிலே உயர்ந்த ஆசனத்திலிருத்தல், காலை நீட்டிக் கொண்டிருத்தல், சயனித்தல், நித்திரை கொள்ளுதல், வெற்றிலை பாக்கு அன்ன ஆகாரம் உண்ணுதல், உடம்பு போர்த்தல், பிறவார்த்தை பேசுதல், இடையில் எழுந்து சிவகருமம் மற்றும் இயற்கை உபாதை தவிர்ந்த கருமங்களைச் செய்தல், உடன் வாசிப்பவர் மற்றும் பொருள் கூறுபவரை அவமதித்தல் முதலிய பாவங்களைச் செய்தோர் நரகத்திலே நெடுங்காலந் தண்டிக்கப்பட்டு இழிந்த பிறப்பை அடைந்து வருந்துவர் எனக் கூறப்படுகின்றது.

## “திருக்கதைகள் கூறல்”

“திருக்கதைகள் கூறல்” என நாம் பார்க்கும் போது அந்தந்த விசேட தினங்களில் அத்தினங்களுக்குரிய புராணத்தினைப் படித்தலாகும். சித்திரா பூரணை தினத்தில் சித்திரபுத்திரனார் கதை மற்றும் பசுவின் கதை வாசித்தல், பிள்ளையார் கதை காலத்தில் பிள்ளையார் கதை வாசித்தல், பிள்ளையார் கவசம் படித்தல், சிவராத்திரி தினத்தில் சிவராத்திரி புராணம் படித்தல், பங்குனித்திங்கள் மற்றும் அம்மன் குளிர்த்தி காலத்தில் காத்தவராயன் மற்றும் கோவலன் சரித்திரம் படித்தல், மகாபாரதக்கதை படித்தல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இங்கே புராணபடனத்திலிருந்து சிறிது வேறுபட்டு பயன் சொல்லுதல் என்ற பகுதி இன்றி வாசித்தல் அன்றி இசையுடன்

பாடுதல் என்ற செயற்பாடு மட்டுமே நடைபெறுகின்றது. அத்துடன் பாடல்கள் இசை சேரும் போது உடுக்கு வாத்தியத்தையும் இசைத்து பாடும் வழக்கம் கிராமப்புறங்களில் காணப்படுகின்றது. முக்கியமாக கோவலன் கதை, காத்தவராயன் கதை, பாண்டவர் கதை (மகாபாரதம்) உடுக்கடித்துப் பாடும் முறை தனிச்சிறப்பு வாய்ந்தது. இது இன்னும் ஒரு படி மேலே போய் கூத்து வடிவிலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இவை பெரும்பாலும் கிராமியத் தெய்வ வழிபாட்டுடன் ஒன்றியுள்ளமை விசேடமாகும். இங்கும் பங்கு பற்றுவோர் பாடுவோர் அதே ஆசார சீலக் கட்டுப்பாடுகளை பேணவேண்டியதுடன் ஒருபடி மேலே போய் காப்புக்கட்டல் என்ற கட்டுப்பாடும் கொண்டு வரப்படுகின்றது. பூரண கும்ப பூஜை மற்றும் காப்புக்கட்டலுடன் ஆரம்பித்து பொங்கலுடன் இந்நிகழ்வுகள் நிறைவடைதலே பொதுவான முறைமை. இவை நேர்த்திக் கடனுக்காக செய்யப்படுதலும் உண்டு.

## திருமுறை ஓதுதல்

"திரு" என்ற சொல்லுக்கு செல்வம், அழகு, இறை, அழகு, ஒளி, பொலிவு, தெய்வத்தன்மை, நல்வினை போன்ற பல பொருள்கள் உள்ளன. இங்கு தெய்வத்தன்மையின் திரு அருட்செல்வம் என்ற பொருளில் அமைகின்றது. "முறை" என்பதற்கு ஒழுங்கு, ஒழுக்கம், உறவு, கூட்டு, நன்மை, நூல் எனப் பல பொருள்கள் உள்ள போதும் முறையாக ஒழுக்கத்தோடு ஒழுங்கோடு வாழ்ந்து நன்மை பெறுவதற்குரிய நூல் எனவும் "சிறப்புமிக்க சைவநெறி சார்ந்த நூ ல்கள் எனவும்" பொருள்படுகின்றது.

இறைவன் கல்லாலின் கீழமர்ந்து அருளிச் செய்த வேதங்கள் "எழுதாக்கிளவி", "அபௌருசேயம்", "சுருதி", எனப் பல பெயர் பெறும். அவற்றின் நுண்பொருளை அருளாளர்களால் மட்டுமே அறிய முடியும். அவற்றின் பொருளை சகல வர்க்கத்து ஆன்மாக்களாகிய நாமும் அறியும் பொருட்டு அருளாளர்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோரை இப்புவியில் அவதரிக்கச் செய்து அவர்கள் வாயிலாக அவற்றை "எழுதுமுறை" களாக இறைவன் அருளிச் செய்தான் என்கிறார் சேக்கிழார் பெருமான். எனவே

திருமுறைப்பாடல்கள் அனைத்தும் இறைவன் திருவாக்குகளே ஆகும். அதாவது சிவபெருமான் திருமுறை ஆசிரியர்களை அதிட்டித்து நின்று அவற்றை அருளிச் செய்திருப்பதால் அவை "அருள்வாக்கு" எனப் பெறுகின்றன. இறைவன் மந்திரவடிவில் உள்ளான். திருமுறையில் உள்ள ஒவ்வொரு சொல்லும் மந்திர ஆற்றலை உடையது. இதையே

*"நமக்கும் அன்பினில் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும்*
*ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" (12.5.70)*

என இறைவன் சுந்தரரிடம் அருளியதாகச் சேக்கிழார் தடுத்தாட்கொண்ட புராணத்தில் குறிப்பிடுகின்றார்.

தேவார முதலிகளான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் அருளிய தேவார திருப்பதிகங்களில் சம்பந்தர் பாடிய 1,76,000 பாடல்களில் கறையான் அரித்தவை போக 4,158 பாடல்களும் அப்பர் பாடிய 4,90,000 பாடல்களில் கறையான் அரித்தவை போக 3,066 பாடல்களும் சுந்தரர் பாடிய 3,80,000 பாடல்களில் கறையான் அரித்தவை போக 1,026 பாடல்களுமே எஞ்சியுள்ளன. அவை சம்பந்தர் பாடிய தேவாரங்கள் 1,2,3 ஆம் திருமுறைகளாகவும் அப்பர் தேவாரங்கள் 4,5,6 ஆம் திருமுறைகளாகவும் சுந்தரர் தேவாரங்கள் 7 ஆம் திருமுறையாகவும் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகப் பதிகங்கள் 51 இல் உள்ள பனுவல்கள் 656 உடன் திருக்கோவை 400 பாடல்களும் 8ஆம் திருமுறையாகவும், ஒன்பதின்மர் பாடிய 288 பதிகங்களைக் கொண்ட திருவிசைப்பாவும் சேந்தனார் பாடிய 13 திருப்பல்லாண்டும் 9ஆம் திருமுறையாகவும் திருமூலர் அருளிய 3,000 பதிகங்கள் 10ஆம் திருமுறை ஆகவும் பதினொராம் திருமுறையில் 1,402 பாடல்களும் சேக்கிழார் சுவாமிகளின் பெரியபுராணத்தில் 4,286 பாடல்களுமாக மொத்தம் 27 ஆசிரியர்கள் அருளிய 18,295 பதிகங்கள் 12 திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. சில இடைச்செருகல் பாடல்களால் இவ்வெண்ணிக்கையில் சிறிது வேறுபாடுகள் சில நூல்களில் காணக்கிடக்கின்றன. திருமுறைகள் இறைவனின் மந்திரரூபமாதலால் புனிதமான இடத்தில் வைத்துப் பக்குவமாய் பேணுதல் வேண்டும்.

முதல் ஒன்பது திருமுறைகள் இறைவனை வாழ்த்திக் கூறுவதால் இவை தோத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. இந்நூல் பக்தியோடு யோக முறைகளையும் எடுத்துக் கூறுகிறது. இது வாழ்க்கைக்கான வழிகாட்டியாக உள்ளதால் சாத்திரம் என்று அழைக்கப்படுகிறது.

திரு ஆலவாயுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமான், நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர், இளம்பெருமாள் அடிகள், அதிராவடிகள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகிய பதினோரு நபர்களால் பாடிய பாடல்கள் 11 ஆம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன. இதில் உள்ள நூல்கள் பிரபந்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

63 நாயன்மார்களின் வரலாற்றைப் பற்றிய சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர்புராணம்12ஆம்திருமுறையாகதொகுக்கப்பட்டுள்ளது. நாயன்மார்களின் வாழ்க்கையை விளக்குவதால் இது வரலாறு என்று அழைக்கப்படுகிறது.

தோத்திரங்களுள் சம்பந்தப் பெருமான் பாடிய முதல் மூன்று திருமுறைகளும் திருப்படைக் காப்பு எனவும் நாவுக்கரச நாயனார் அருளிய 4,5,6 ஆம் திருமுறைகள் தேவாரம் எனவும் சுந்தரர் பாடிய 7 ஆம் திருமுறை திருப்பாட்டு எனவும் வகைப்படுத்தப்படுகின்றது.

திருமுறைகளை கோவில்களிலோ மற்றும் வைபவங்களிலோ இசைத்தல்திருமுறைஓதுதல்எனப்படும். திருமுறைகளைஓதுபவர்கள், புராணபடனம் செய்பவர்கள் “ஓதுவார்கள்” என சமூகத்தினால் கௌரவமாக, மரியாதையுடன் அழைக்கப்படுகின்றார்கள். ஓதுவார்களின் வாக்கிலும் எம்பெருமான் அமர்ந்திருக்கிறான் என்பது ஐதீகம்.

ஓதுபவர்கள் புராணபடனம் செய்பவர்கள் போன்றே சிவதீட்சை பெற்றவர்களாக இருப்பது அவசியம். சைவ ஆசாரம் பொலியும்

புறக்கோலத்துடன் உள்ளமும் தூயவராக, சிவசின்னங்கள் தரித்தவர்களாக, ஆசௌசம், தீட்டு, துடக்கு அற்றவர்களாக மாமிசம் புசியாதவர்களாக இருப்பது சிறந்தது எனவும், ஆண்கள் மேலங்கி தலைப்பாகை இல்லாமலும் தோய்த்துலர்ந்த வேட்டியுட்பட ஈராடை அணிந்தும், பெண்கள் சேலை சட்டை அணிந்தும் படிப்பது சிறந்தது என்றும் சைவ வினாவிடை குறிப்பிடுகின்றது. சிவ சிந்தனையம் தாங்கள் இறைவனுக்குச் சரியைத் தொண்டு செய்யும் அடியார்கள் என்ற எண்ணமும் எப்போதும் மனதில் இருக்க வேண்டும்.

பன்னிரு திருமுறைகளை, சமயதீட்சை பெறாதவர்களும், பெண்களும் ஓதலாம் எனவும் சாதி மத வேறுபாடோ வயதெல்லையோ கருதாமல் ஆசாரசீலர்களாக யாரும் ஓதலாம் என்ற கருத்துகளைத் தெரிவிப்பவர்களும் இல்லாமலில்லை.

சமதரையில் பாயிலேனும் துணியிலேனும் இருந்து படிப்பது சிறந்தது. இயலாதவர்கள் படிக்கும் போதாகிலும் எழுந்து நின்று படிப்பது சிறந்தது. வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் உட்கார்ந்து திருமுறைப்பாராயணம் செய்வதே சிறந்தது.

படிக்க ஆரம்பிக்கும் பொழுது தூபதீபம் ஏற்றி விநாயகரைத் தரிசித்து சிவபிரானையும் உமையம்மையையும், சமயாசாரியாராகிய நால்வரையும் திருத்தொண்டர் சீர்பரவுவாராகிய சேக்கிழார் நாயனாரையும் தரிசித்து மனதில் நினைந்து திருச்சிற்றம்பலம் சொல்லி ஆரம்பித்தல் வேண்டும். ஆரம்பத்திலும் அன்றைய தின இறுதியிலும் காப்புச் சொல்லுவது மிக மிக அவசியம். புராணபடனத்தில் காப்புச் சொல்வதே மிக மிக அவசியமானது எனக் குறிப்பிடப்படுகின்றது. திருமுறை முற்றோதலில் காப்பு என்று சொல்லப்படுவது, திருமுறைகளின் முதற் பாடலான “தோடுடைய செவியன்” தொடர்ந்து இறுதிப் பதிகமான “என்றும் இன்பம்....” “பூழியர்கோன்....” எனத் தொடங்கும் நால்வர் துதி இறுதியாக “வான்முகில் வழாது...” என்ற வாழ்த்துப் பாடலுடன் நிறைவு செய்தல் வேண்டும். இவற்றிற்கு மேலதிகமாக பத்தாம் திருமுறை படிக்கும் காலத்தில் “ஐந்து கரத்தனை...” எனத் தொடங்கும் திருமந்திர விநாயகர் காப்பினையும் பன்னிரண்டாம் திருமுறை படிக்கும் காலத்தில் “உலகெலாம்...” எனத் தொடங்கும் நடராசர் துதியையும் ஓதுதல் வேண்டும். கொழும்பு

விவேகானந்த சபையில் இதற்கு மேலதிகமாக திருமுறைகளின் முதற்பாடலான "தோடுடைய செவியன்" ஐத் தொடர்ந்து அதே பதிகத்தின் இறுதிப் பாடலான "அருநெறிய..." இனையும் ஓதுவது வழக்கம்.

திருமுறைகளுக்கான பண்கள் 23 ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளன. திருமுறைகளை முற்றோதலில் படிக்கும் போது அவற்றிற்கென குறிக்கப்பட்டுள்ள பண்ணில் தாளம்போட்டுப் படிப்பது சிறந்தது. இயன்றளவில் பாடுவதே நல்லது. இதைப் "பண்ணாங்கம்" என்பர். இப் பண்ணையே தாளம் போடாமல் விருத்தம் போலப் பாடுவதும் உண்டு. இதை "சுத்தாங்கம்" என்பர். எனினும் படனம் செய்ய விரும்புபவர்களுள் பண்ணோ பண்களுக்கேற்ற இராகங்களோ பாட வராது போகலாம். இருமுறைகளையும் கைக்கொள்ளலாம் அதில் தவறில்லை. உண்மையில் திருமுறைகளைப் பாராயணம் செய்ய விரும்புபவர்கள் பண்களோ, பண்களுக்கு ஏற்ற இராகமோ பாடவராதே என்று எண்ணி திருமுறைகளைப் பாராயணம் செய்யாமல் இருக்கக் கூடாது. தெரிந்த அளவு ஏதாவது இராகத்தை இசைத்துக் கொண்டும் திருமுறைகளைப் பாடுவது பிழையாகாது. இவ்வுண்மையைச் சம்பந்தர் தனது பதிகத்தில் (3-71-1)

*"கோழை மிடறாக கவி கோளும் இலவாக இசை கூடும் வகையால்*

*ஏழை அடியாரவர்கள் யாவை சொன சொல் மகிழும் ஈசன்...."* எனக் குறிப்பிடுகின்றார்.

எந்த முறையில் ஓதினாலும் திருமுறைகளை வாய்விட்டுப் பாடவேண்டும் மனத்திற்குள்ளேயே படனம் செய்வதோ முணுமுணுத்துக் கொண்டு படனம் செய்வதோ கூடாது. அதற்குக் காரணம் திருமுறைகளில் உள்ள சொற்களுக்கு மந்திர ஆற்றல் உண்டு. அந்த ஆற்றல் சொற்களை வாய்விட்டுப் பாடும் போது ஒலி அலைகளாகச் சென்று நம்மைச் சுற்றி ஒரு பேராற்றலை ஏற்படுத்துகின்றது. திருமுறை பாடுபவர்களைக் கெட்ட ஆவிகள் அணுகுவதற்கு அஞ்சுகின்றன. சிறிய நச்சுப் பிராணிகள் கூட அவர்கள் நெருங்குவதில்லை. திருமுறைச் சொற்களிலுள்ள மந்திர ஆற்றல்

திருமுறைப் படனம் செய்பவர்களைச் சிறிய நச்சுப் பிராணிகள் கூட அணுகவிடாமல் தடுக்கின்றன.

திருமுறைகளை அவை சொல்லுகின்ற பாட்டின் பொருள் உணர்ந்து சொற்பிழையோ சொற்சிதைவோ, எழுத்துச் சிதைவோ எழுத்துப் பிறழ்வோ, நீட்டிப்புகளோ இல்லாமல் வாய்விட்டுப் பாடவேண்டும். நாம் எத்தனை பாடல்கள் பாடினோம் என்பது முக்கியமல்ல எத்தனை பாடல்களைத் திருத்தமாகப் பாடினோம் என்பதே அவசியம். முக்கியம். அதே போன்று நாம் ஆண்டவனுக்கே அர்ச்சிக்கிறோம் என்ற நினைப்பு இருக்க வேண்டுமேயன்றி பார்வையாளரைப் பற்றித் தேவையற்ற கவனஞ் செலுத்தாமல் ஆண்டவனின் அடியார்கள் என்ற எண்ணத்துடன் படிக்க வேண்டும். அதேவேளை திருமுறைகளைப் படனம் செய்பவர்கள் வாக்கிலும் சிவபெருமான் மந்திர வடிவில் எழுந்தருளியுள்ளான் என்றும் கூறப்படுகின்றது.

முற்றோதல் படிக்கும் சபையிலே உயர்ந்த ஆசனத்திலிருத்தல், காலை நீட்டிக் கொண்டிருத்தல், நித்திரை கொள்ளுதல், வெற்றிலை பாக்கு, உணவு போன்றவை உண்ணுதல், தலைகோதுதல், பிறவார்த்தை பேசுதல், இடையில் எழுந்து சிவகருமம் மற்றும் இயற்கை உபாதை தவிர்ந்த கருமங்களைச் செய்தல், உடன் வாசிப்பவர்களை அவமதித்தல் முதலியன, பாவங்களாகக் கருதப்படுகின்றன. இடையில் எழுந்துசெல்லும் சந்தர்ப்பங்களின் திருமுறைப் புத்தகத்தை மூடி அதற்கான பீடத்தில் வைத்துச் செல்லுதல் வேண்டும்.

திருமுறைமுற்றோதல் என்பது ஏறத்தாழ ஒரு மண்டலம் வரை (48 நாட்கள்) மேற்கொள்ளப்படும் ஒரு குழு முயற்சி. இக்காலப்பகுதியில் மாறுதல்கள் ஏற்படலாம். திருமுறைமுற்றோதலின் போது தனியொருவரின் வெற்றிதான் மொத்த வெற்றி. ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக இருப்பர். ஒவ்வொரு விதத்தில் திறமைசாலிகளாகவும் பாண்டித்தியம் பெற்றவர்களாகவும் இருப்பர். அதேவேளை பயிலுநர்களும் இருப்பார்கள். எதிர்காலச் சந்ததியினரையும், அனுபவசாலிகளையும் அரவணைத்து அனுசரித்துச் செல்ல ஒவ்வொருவரும் தயாராக இருக்க வேண்டும்.

இறுதிநாளில் நடராஜப்பெருமானுக்கு விசேட பூஜை செய்து

நால்வரையும் திருமுறை நூல்களையும் அலங்கரித்த தேரிலோ அன்றி பல்லக்கிலோ வைத்து அன்றி திருமுறைகளைப் பட்டுத்துணியால் சுற்றி ஒரு தட்டத்தில் வைத்து ஓதுவார் மூர்த்தியை நம்பியாண்டார் நம்பியாகப் பாவித்து அவருக்கு பரிவட்டம் தலைப்பாகை கட்டி மங்கல வாத்தியங்கள் ஒலிக்க சுமந்து வர ஓதுவார்கள் ஒவ்வொரு திருமுறையிலும் முதலாவது பதிகத்தை குழுவாக ஓதிக்கொண்டு அவருடன் வீதியுலா வருவர். இறுதிப்பதிகம் பாடிமுடிய மீண்டும் நடராஜர் பாதங்களில் வைத்துப் பூஜைசெய்து அதற்குரிய இடத்தில் வைத்து பங்குபற்றியோருக்குப் பிரசாதம் மற்றும் காணிக்கை வழங்கி அன்னதானமும் வழங்கப்படுவது வழமை.

பன்னிரு திருமுறைமுற்றோதல் நீண்டகாலம் எடுப்பதாலும் சில விசேட காரணங்களாலும், இதற்கு மாற்று வடிவங்களும் வழக்கத்தில் உள்ளன.

## திருவாசக முற்றோதல்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய 8 ஆம் திருமுறையில் அடங்கும் 51 அதிகாரங்களைக் கொண்ட 656 பாடல்களையுடைய திருவாசகப் பதிகத்தினை முற்றோதல் செய்தல் திருவாசக முற்றோதல் எனப்படும். இது அநேகமாக ஒரே நாளில் (தொடர்ந்து) நிறைவுறுகின்றது. இதுவும் திருமுறை முற்றோதலைப் போலவே நடைபெற்றாலும் சில கோவில்களில் ஒவ்வொரு அதிகார முடிவிலும் நடராஜப்பெருமானுக்கு கற்பூரதீபம் காட்டுதலும் விசேடமாக இடம்பெறுகின்றது. இதற்குப் பண் இல்லை என்றாலும் மோகன இராகத்தில் பாடுவது இனிமை தரும்.

பெரும்பாலும் மார்கழி மாதத்திலே விசேட தினங்களிலும், மணிவாசகர் குருபூசை தினத்திலும் இம்முற்றோதல் நடைபெறுவது வழக்கம். வீதிவலம் வரும்போது மணிவாசகர் சிலையை மட்டும் கொண்டு சிவபுராணம் ஓதுவது வழமை.

## அடங்கன் முறை முற்றோதல்

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய தேவார முதலிகள் மூவர் அருளிய 1 முதல் 7 வரையான திருமுஜறகளிலுள்ள 8250 தேவாரப் பதிகங்களே

"அடங்கன் முறை" எனப்படுகின்றது. அடங்கன் முறையினை தினமும் படனம் செய்து வருபவர் நிச்சயம் முத்தி அடைவர் என்ற ஆன்றோர் முடிபு. இதுவே "அடங்கன் முறை" முற்றோதல் எனப்படுகின்றது. ஆனால் இது இன்றைய காலத்திற்கு ஓர் அசாதாரண இலக்காக அமைகின்றது. ஆனால் பன்னிரு திருமுறைகளைப் பாட வளங்கள் குறைவாக உள்ள, எந்திரமயமான இந்தக் காலகட்டத்தில் அடங்கன்முறை பதிகங்கள், பன்னிரு திருமுறைகள் முற்றோதும் அதே விதிமுறைகளைப் பின்பற்றி நாற்பத்தெட்டு நாட்கள் ஓதுதலே "அடங்கன் முறை" முற்றோதல் என மருவி நிற்கின்றது. வீடுகளில் பரவலாக இது தற்போதும் நடைமுறையில் உள்ளது.

## அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

அடங்கன் முறையினை தினமும் படனம் செய்து வருபவர் நிச்சயம் முத்தி அடைவர் என்ற ஆன்றோர் முடிபை அறிந்த "சிவாலய முனிவர்" என்ற முனிசிரேஷ்டர் அப் பயிற்சியை மேற்கொண்டார். ஆயினும் அன்றாடம் அது முற்றுப் பெறாமையால் வருத்தம் உற்று சிதம்பரம் சென்று குறையிரந்து எம்பெருமானைத் தவமிருந்தார். அப்போது "சிவாலய முனிவனே நீ பொதிய மலை சென்று அகத்திய முனிவனை அடையின் உனது எண்ணம் ஈடேறும்" என அசரீரி எழுந்தது. பொதிய மலையில் அகத்திய முனிவரைத் தவம் செய்து தரிசித்த போது அவர் இரங்கி அடங்கன் முறை முழுவதையும் சிவாலய முனிவருக்கு உபதேசித்து அவற்றிலிருந்து எட்டு தலைப்புக்களைக் கொண்ட இருபத்தைந்து பதிகங்களைத் திரட்டி வழங்கினார். இந்த இருபத்தைந்து பதிகங்களையும் அன்றாடம் உள்ளம் ஒன்றிப்படனம் செய்து வருபவர்கள் அடங்கன் முறையினைப் பாராயணம் செய்த பயனை அடைவார்கள் என்பது அகத்தியர் வாக்கு.

## பஞ்சபுராணம் ஓதுதல்

பன்னிரு திருமுறைப் பாடல்களிலே ஐந்து பாடல்களை தேர்ந்தெடுத்து ஓதுவதே பஞ்சபுராணம் ஓதுவதாகும். அவற்றை ஓதும் வரிசைக் கிரமம் வருமாறு. இவை தவிர்ந்த வேறு பிற பதிகங்கள், புராணங்கள் கீதங்கள் படிப்பது தவிர்க்கப்படுதல் வேண்டும்.

1. *தேவாரம் ( 1 தொடக்கம் 7 ஆம் திருமுறை வரை)*
2. *திருவாசகம் (8 ஆம் திருமுறை)*
3. *திருவிசைப்பா (9ஆம் திருமுறை)*
4. *திருப்பல்லாண்டு (9 ஆம் திருமுறை)*
5. *திருப்புராணம் (12 ஆம் திருமுறை)*

திருக்கோயில்களில், பூசையின் போது "பஞ்ச புராணம்" ஓதுவது வழக்கம். இவற்றைத் திருச்சிற்றம்பலம் சொல்லி ஆரம்பித்தல் வேண்டும். இறுதியாக திருப்புராணம் ஓதிய பின்

*"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன் ஞானகுருவாணி பதம்நாடு"* எனக்கூறி

*நமப் பார்வதி பதையே -*

*அர ஹர மகா தேவா* (மும்முறையோ ஒரு தடவையோ)

அந்தக் கோவில் மூலவரின் திருநாமம் பெயர்

*- அரோ ஹரா*

(உதாரணமாக) விவேகானந்த சபை ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுக்கு

*- அரோ ஹரா*

*தென்னாடுடைய சிவனே போற்றி - எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி*

*காவாய் கனகத்திரளே போற்றி போற்றி போற்றி*

*இன்பமே சூழ்க - எல்லோரும் வாழ்க*

என்று நிறைவு செய்வது சாலச்சிறந்தது.

எனினும் இவ்வைந்து பதிகங்களுடன் ஆறாவதாக அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் அன்றி அத்தெய்வத்துக்குரிய விசேட பதிகம் பாடி தொடர்ந்து கந்தபுராண வாழ்த்துப்பாடல் (வான்முகில் வழாது பெய்க) பாடுதலும் நடைமுறையிலுள்ளது. பஞ்சபுராணம் ஓதி முடித்ததும் திருச்சிற்றம்பலம் சொல்லியதன் பின்னர் தான் இவற்றைப் பாடலாம்.

## தேவார புராணம் ஓதுதல்

பன்னிரு திருமுறைப் பாடல்களிலே 1 - 7 வரையான திருமுறையில் உள்ளடங்கியுள்ள தேவாரத்தில் ஒன்றையும் 12ஆம் திருமுறையான பெரியபுராணத்தின் ஒரு பாடலையும் மாத்திரம் பஞ்சபுராணம் ஓதும் முறையைப் பின்பற்றி ஓதுதல். அநேகமாக சுவாமி வீதி வலம் வரும்போது ஈசான மூலையில் ஓதப்படுவது வழக்கம்.

## பன்னிரு திருமுறை விண்ணப்பம்

பன்னிரு திருமுறைப் பாடல்களிலே ஒவ்வொரு திருமுறைக்கும் ஒரு பாடலாக மொத்தம் 12 பாடலை பஞ்சபுராணம் ஓதும் முறையைப் பின்பற்றி ஓதுதல்.

இப்பதிகங்களில் உள்ள சொற்கள் மந்திர ஆற்றல் உடையன ஆதலின் நாள்தோறும் ஆணவ மல மறைப்பைச் சிறிது சிறிதாக நீக்கி மும்மல நீக்கத்தையும் பெறச் செய்து நம்மை வீடுபேற்றுக்கு இட்டுச் செல்லக்கூடியன. அருகிப் போகாது பேணிப் பாதுகாக்கப் படவேண்டியன. நாமும் இவற்றைக் கேட்டும் படித்தும் பகிர்ந்தும் பயன் பெறுவோமாக.

*"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"*

திருமுறைச்செல்வர்
**செல்வம் அம்பலவாணர்**
C.Eng (IESL), MBA (UOC)

# சித்தி தரும் சித்த மருத்துவம்

அண்மையில் Covid 19 என்ற உலகையே உலுக்கிய கொரோனா வைரஸ் தொடர்பாக அன்றே சித்தர்களுக்கெல்லாம் முதல்வரான அகத்திய முனிவர் கொரோனா வைரஸ் என்ற பெயரில்லாமல், பாம்பிலிருந்து உருவாகின்ற வைரஸ் எப்படி உருவாகிறது. அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்று தன்னுடைய பாடலில் விவரித்துக் கூறியிருக்கிறார். அந்த பாடலை இங்கே பார்க்கலாம்.

*"சர்ப்பமுண்டு*
*சர்வ நோயுமுண்டு*
*கர்ப்பமறியா கன்னியும்*
*வாயு பகவான் பகைகொண்டு*
*பித்தம் சித்தம் சிதை கொள்வாள்"*

என்பதாகும். இந்த பாடலின் அர்த்தம் யாதெனில், பாம்பை சாப்பிடுகின்றவர்களுக்கு இந்த உலகத்தில் உள்ள எல்லா நோய்களும் ஒன்று சேர்ந்தது போல, அதிக உடல் பலமாக இருக்கின்றவர் குழந்தை பெற்றுக் கொள்ளாத கன்னிப் பெண்ணால் கூட தாங்கிக் கொள்ள முடியாத, நுரையீரலைத் தாக்கி உயிரையே அழிக்கத் துணியும் நோய்க்கு ஆளாவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆம், காடுகளிலும், மலைகளிலும் வாழ்ந்த, ஆதி சிவனாகிய சித்தர்களின் குருவாம் சிவபெருமானிடம் தீட்சைபெற்ற சித்தர்களால் மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம், உடலின் தத்துவம், சமயம், சோதிடம், பஞ்சபட்சி, சரம், மருந்து, மருத்துவம், பரிகாரம் போன்றவற்றிலும் ஈடுபாட்டுடன் உருவாக்கப்பட்ட ஒரு அற்புதமான மருத்துவமுறை தான் சித்த வைத்தியமாகும்.

இதைப் பாட்டி வைத்தியம், கை வைத்தியம், தமிழ் மருத்துவம், நாட்டு மருத்துவம், மூலிகை மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம்,

சித்த வைத்தியம் என்று பலர், பல பெயர்களில் நாம் அழைப்பதுண்டு. சித்த வைத்தியத்தின் தந்தை என்று அகத்தியரை நாம் குறிப்பிடும் அதேவேளை இலங்கையை ஆண்ட மன்னன் இராவணேசன் "நாடிபரிக்ஷா" என்ற நாடி மருத்துவ நூல் உட்பட 27 மருத்துவ நூல்களை எழுதியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சித்த மருத்துவம் என்பது தமிழ் மருத்துவ முறையாகும். பண்டைய சித்தர்கள் இதனைத் தமிழ் மொழியில் உருவாக்கித் தந்துள்ளார்கள். மருத்துவத்தில் துறவிகளான சித்தர்கள் முயன்று, ஆராய்ந்து செயற்படுத்தி வெற்றி பெற்றதால் "சித்தா" எனப் பெயர் பெற்றது. சித்தர்கள் தங்களது யோக சித்தியால், தவ வலிமையால் பல்வேறு மூலிகைகளின் குணங்களை தாது, தாவர, ஜீவ வர்க்கங்களின் தத்துவங்களை உணர்ந்து, மக்களைப் பாதிக்கும் நோய்களை விரட்டி, நூறாண்டு வாழ்வதற்கு ஏற்ப பல்வேறு மருந்துகளைக் கண்டறிந்தனர்.

அது மட்டுமல்ல சித்தர்கள் தமது ஞானதிருஷ்டியினால் சில நோய்கள் தொடர்பான எதிர்வுகூறலையும் தெரிவித்துள்ளார்கள். இது தொடர்பாக அண்மையில் அனுபவத்தினை அறிமுகத்தில் பகிர்ந்து கொண்டேன்.

மொத்தத்தில், சித்தர்களின் ஒருமித்த கருத்து என்னவென்றால், "அண்டத்தில் உள்ளதே பிண்டம்" - "பிண்டத்தில் உள்ளதே அண்டம்". அதாவது, இந்த உலகத்தில் எல்லாம் இருக்கின்றன என்பதே இதன் பொருளாகும்.

பாட்டிவைத்தியம்என்றஇந்தசித்தவைத்தியம்ஒருகாலத்தில்கிராம வைத்தியமாக இருந்து இன்று அதன் முக்கியத்துவத்தை இழந்துள்ள அதேவேளை, வெளிநாட்டவர்களே சித்த வைத்தியத்தினை நாடி வருவது அதிகரித்துள்ளமை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

சித்த வைத்தியமானது எம்மைச் சூழவுள்ள மூலிகைகளையே நோய் நீக்கியாக பாவிப்பதனால் சுலபமானது. ஒரு மூலிகையின் நோய் நீக்கும் தன்மையானது, அதன் வடிவம், நிறம், சுவை, தன்மை போன்ற நான்கு அம்சங்களைக் கொண்டு, இந்த மூலிகையானது

இந்த நோயைத் தீர்க்கும் என்று சித்தர்களால் குறிப்புகள் வரையப்பட்டன. இவ்வண்ணம் ஒரு பொருளைப் பகுத்தறிந்து, அதை மனித உடலோடு ஒப்பிட்டு, அதை மருந்தாக மாற்றி அமைத்தனர் சித்தர்கள். இந்த மருத்துவ முறையானது இயற்கையில் கிடைக்கக்கூடிய எண்ணற்ற புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வித்து முதலியவைகளைக் கொண்டும், நவரத்தின, நவலோகங்களைக் கொண்டும், இரசம், கந்தகம், கற்பூரம், தாரம், அயம், பவளம், துருசு முதலியவைகளைக் கொண்டும் தயாரிக்கப்படுவன. திரிகடுகு, திரிசாதி, திரிபலை, அரிசி வகை, பஸ்பம், செந்தூரம், மாத்திரை, கட்டுகள், பொடிகள், குளித்தைலங்கள், கஷாயங்கள் முதலிய பல பிரிவு வகைகளாக வியாதிகளுக்கு பாவிக்கப்படுவன. நல்ல தண்ணீர், கடல் நீர், ஊற்று நீர், கிணற்று நீர் முதலிய பல நீர் வகைகளைக் கொண்டும், பால், தேன், சீனி, நெய் முதலியனவற்றைக் கொண்டும், தெங்கு, புங்கு, புன்னை, வேம்பு, எள்ளு முதலிய தாவர எண்ணெய் வகைகளைக் கொண்டும் உருவாக்கப்பட்ட ஒரு மருத்துவ முறையாகும்.

சித்த முறையில் வேதியியல் பெரும்பங்காற்றி வருகிறது. மருந்துகள் தயாரிப்பதற்கும் அடிப்படை உலோகங்களை தங்கமாக மாற்றுவதற்கும் வேதியியல் உதவி புரிகிறது. மருந்து தயாரிப்பில் பல யுக்திகள் கையாளப்பட்டது. செடிகள் மற்றும் உலோகங்கள், கனிமங்கள் ஆகியவைகளின் தன்மைகள் முழுவதும் இந்த துறையில் ஆராயப்படுகின்றன. சித்தர்கள், இவ்வகையான வேதியியல் மாற்றங்கள் பற்றி நன்கு அறிந்திருந்தனர். காய்ச்சி வடித்தல், ஆவியாக்குதல், கலவை செய்தல், உருக்கி கலத்தல், புளிக்க வைத்தல், பொங்க வைத்தல் முதலான வேதி முறைகளை கையாண்டார்கள். தங்கம் பிரித்தெடுத்தல், சுத்தப்படுத்துதல், நீர்மநிலையாக்குதல் ஆகிய முறைகளையும் அவர்கள் பயன்படுத்தினார்கள்.

சித்தர்கள், ஒரு நோய்க்கு மருத்துவம் பார்ப்பதற்கு, தங்களது மருத்துவ பாணியில் பல்வேறு வகைப்பாடுகள் செய்து வைத்திருந்தனர். முதலில் மனித உடல் தத்துவங்களான 96 முறைகளையும் கண்டு, நோயாளியின் நாடியைப் பரிசோதித்து நோய் வரும் பாங்கினை நுணுக்கமாக அறிந்துகொண்டனர்.

சித்த மருத்துவம் குறித்த தத்துவ அடிப்படையைப் பின்பற்றுகிறது. இதன் படி மனிதன் 96 தத்துவங்களால் ஆனவன். இந்த 96 தத்துவங்களில் நோய் என்பது அடிப்படையில் திரிதோஷம் சம நிலை இழத்தலும், சப்த தாதுக்கள் கெடுதலும் ஆகும். உடலை ஒரு இயந்திரமாக எடுத்தால் இந்த திரிதோஷமும், சப்த தாதுக்களுமே பிரதான ஆளி (Main Switch) இவற்றை சரி செய்வதே வைத்தியம் எனப்படுகிறது. (இந்த இரண்டையும் சரி செய்பவையே மருந்துகள் எனப்படுகிறது. திரிதோஷத்தையும் சப்த தாதுக்களையும் சரி செய்தால் நோய் குணமாகும்.)

இந்த இரண்டும் சரி செய்யப்பட்டால் பின்னர் உடல் எனும் கோட்டையின் வாயில்களான ஐம்புலன்களையும், அந்தக்கரணங்களையும், பிராணனையும் சரியாக வைத்திருந்தால் ஆரோக்கியம் வாய்க்கும் என்கிறது.

ஆகவே சித்த ஆயுர் வேத மருத்துவத்தின் அடிப்படையானது ”நீ வலுவாக உனது திரிதோஷம், சப்த தாதுக்கள் ஆகியவற்றை வைத்துக்கொள். வெளியில் இருந்து எதுவந்தாலும் அவை பார்த்துக்கொள்ளும், உனது கோட்டையை தினாச்சாரத்தால், நோயணுகா விதியால் சுத்தம் செய்து கொள்” என்பதேயாகும்.

இந்த மருத்துவமுறை பிரபஞ்ச ஒழுங்கினை மதித்து நடக்கும் போது மாத்திரம்தான் நன்மை செய்யும்!

பிரபஞ்ச ஒழுங்கினை மதிக்காத, குழப்பும் குள்ள நரித்தனப் புத்திசாலி மனிதன் உருவாகிய பின்னர், உனக்குள் இருக்கும் திரிதோஷ சம நிலையும், சப்த தாதுக்கள் என்று எதுவும் இல்லை. நீ உனது நிர்ப்பீடனத்தை நம்பாமல் நான் தரும் மருந்து உனக்கு வரும் நோயின் காரணியை அழித்துதான் நோயை வெற்றி பெறும் என்ற கோட்பாட்டினை சிகிச்சை என்று கொண்டு வந்து, உனது எதிரியை அழிக்கும் போது உனது படையும் சாகும் என்று பக்கவிளைவையும் இயல்பான ஒன்று என்று ஏற்றுக்கொண்டு மருந்துகளைக் கண்டுபிடிக்கிறோம் நோய்களைக் கண்டுபிடிக்கிறோம் என்ற நிலைதான் இன்றைய நவீன மருத்துவம்.

ஆக பிரபஞ்ச ஒழுங்கை மதித்து ஒழுகுபவர்களுக்கு சித்த ஆயுர்வேத மருத்துவம் பலன் தரும்.

ஆகவே சித்த ஆயுர் வேத மருத்துவத்தில் நோய்களுக்கு மருந்தினைக் கண்டுபிடிப்பதில்லை. வரும் குணங்குறிகளால் எந்த தோஷமும், எந்த தாதுவும் கெட்டிருக்கிறது என்பதைக் கவனித்து அவற்றைச் சீர் செய்யும் குண, வீரிய, விபாகத்தினை சரி விகிதத்தில் உடலுக்குள் தந்தால் நோய் உடலை விட்டுப்போகும். ஆனால் இது பலனளிக்க அனுபானம், பத்தியம், துணை மருந்து, தினாச்சாரம் என்பவை அவசியம். இவை எல்லாம் கடைப்பிடிக்க முடியாத குழம்பிய சமூகத்தில் சித்த ஆயுர்வேத மருத்துவம் சரியான பலனை தராது என்ற போது நவீன மருத்துவமே சரியான ஒற்றைத் தீர்வாகக் காட்சியளிக்கிறது.

சித்த மருத்துவத்தில் நோயினைக் கண்டறிவதற்கு அடிப்படையான பரிசோதனை முறைகள் எட்டு உள்ளன. அவை, நாடி ஸ்பரிசம் நாக்கு, நிறம், மொழி (நோயாளியின் பேச்சு) பார்வை (விழி), மலம், சிறுநீர். இவற்றுள் முதன்மையானதும், முக்கியமானதும் ஆகும். இவற்றுள் அடிப்படையானதுமானது நாடியாகும். நாடி பார்ப்பது என்பது சித்த மருத்துவத்தின் அடிப்படை மட்டுமல்ல, தனிச்சிறப்பும் கூட.

நம் உடலில் வளி, அழல் மற்றும் ஐயம் இவை மூன்றும் தாம் இருக்க வேண்டிய அளவில் மிகுந்தாலும், குறைந்தாலும் நோய் தோன்றக் காரணமாக அமையும். வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றுமே நோய்களின் ஆதாரங்களாகும். இவை சித்த வைத்தியத்தில் முத்தாதுக்கள் எனப்படுகின்றன. திருவள்ளுவரும் நோயில் இம்மூன்றையும் பற்றித் தனது குறளிலும் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

*மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்*
*வளிமுதலா எண்ணிய மூன்று*

இவற்றில் வாதம், நம் உடலின் இயக்கத்தை, தசை, மூட்டுக்கள், எலும்பு இவற்றின் பணியை, சீரான சுவாசத்தை, சரியாக மலம் கழிப்பதையும் பித்தம், தன் வெப்பத்தால் உடலைக் காப்பது, ரத்த ஓட்டம்,

மன ஒட்டம், செரிமான சுரப்பிகள், நாளமில்லாச் சுரப்பிகள் போன்ற அனைத்தையும் இயக்குவது போன்றவற்றையும் கபம், உடலெங்கும் தேவையான இடத்தில் நீர்த்துவத்தையும் நெய்ப்புத்தன்மையையும் கொடுத்து, எல்லாப் பணிகளையும் தடையின்றிச் செய்ய வேண்டிய தன்மையையும் உறுதிப்படுத்தும்.

ஆபத்தான அவசர நல பிரச்சினைகளுக்கு உடனடி சிகிச்சை சேவையைத் தவிர, மற்ற எல்லாவிதமான வியாதிகளையும் சித்த மருத்துவ முறைகளால் குணப்படுத்த முடிகிறது. இந்த மருந்துகளை உண்பதால் உடலுக்கு எந்தவித தீங்கும் பக்கவிளைவும் நேராது என்பது நிரூபிக்கப்பட்ட, வெளிப்படையான உண்மையாகும். இதுவே அதன் முக்கிய சிறப்பம்சமுமாகும்.

அத்துடன் சித்த வைத்திய முறையானது நோயை குணப்படுத்த மட்டுமே செயற்படாமல் அந்த நோயாளியின் சுற்றுப்புறம், வயது, பாலினம், வகுப்பு, பழக்க வழக்கங்கள், மனநிலை, தங்குமிடம், உணவு மற்றும் கட்டுப்பாடு, தோற்றம் ஆகியவைகளையும் கருத்தில் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றமையால் நோயின் தன்மை குறையும். அதேவேளை நோயாளியின் வாழ்வியல் முறையிலும் மாற்றம் ஏற்படுத்துகிறது.

சித்தர்களின் மருத்துவத்தின் தத்துவத்தை ஒழுங்காகப் பயிலாமல் மேற்கத்தேய மருத்துவம் தான் நம்பகமான மருத்துவம் என்று உள்ளூர நம்புகவர்களின் அறியாமைப் பேச்சு மேவி நிற்கும் இக்கால கட்டத்தில் எதுவித பக்க விளைவுகளுமற்ற உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் ஆத்மார்த்த ரீதியாகவும் எமக்கு சிகிச்சையை அளித்து உடல்நோயை மட்டுமல்ல உளநோய் உட்பட ஆயுளையே நீட்டிக்கும் சித்தம் கொண்ட எமது முன்னோர்கள் அறிமுகம் செய்த, நாம் அனுபவத்தின் மூலம் கண்டறியப்பட்டு ஆனால் இன்று மறக்கப்பட்ட சித்த மருத்துவமானது பாட்டி வைத்தியம் என்று அழைக்கப்படும் சித்தி தரும் வைத்தியம் என்று கூறுவதில் தவறில்லை.

**செல்வம் அம்பலவாணர்**
மறவன் புலோ

# புரிதலும் தெளிதலும்

அது மார்கழி மாதம்.. வெள்ளக்காடாகக் காட்சியளிக்கும் வயல் வெளிகள். தாழ்நிலங்களில் அமைந்திருக்கும் மண் வீடுகளுக்குள் தண்ணீர் புகாது விட்டாலும் ஊறல்.. சாக்குகளும் உரப்பைகளும் தான் நில விரிப்புக்கள். அவற்றில் ஒன்று தான் கந்தசாமியின் "வசந்தமாளிகை".

வடபுறத்தே மருதமரத்தடியில் குளத்தடியில் கடற்கரையை அண்மித்தவாறு ஊரிற்கே காவலான தெய்வத்தின் உறைவிடம்.. ஆம் சாலவயற்கரை சித்தி விநாயகர் கோவில்.. சிறிய தென்றாலும் மூர்த்தமான கோவில். அங்கு குடிகொண்டிருக்கும் அம்பலத்தாடி வைரவரும் காளி ஆச்சியும் அனைவரினதும் குடும்ப உறுப்பினர்கள்.

கோவிலின் இருப்பிடம் எல்லையல்ல. மாறாக கிராமத்தின் மத்தியபுள்ளி. இயற்கை வளம் கொண்டது. வயலும் வயல் சார்ந்த இடத்திற்கும் கடலும் கடல்சார்ந்த இடத்திற்கும் மத்தியபுள்ளி. உயர்ந்த இடம். அதனால் மழையின் பாதிப்பு இல்லை. மருதமரநிழல்.. வெயிலின் பாதிப்பும் இல்லை.. இரண்டு நேர நித்தியபூசை.. வெள்ளிக்கிழமைகளில் பஜனை.. அது ஊரின் சிறார்களுக்கானது.. பெத்தாச்சி என அன்பாக அழைக்கப்படும் ஊர்த்தலைவரின் தாயாரின் உபயம். பங்குபற்றாத சிறுவர்களை அடையாளம் கண்டு பெற்றாரிடம் பெத்தாச்சி முறையிட்டால் அதோகதிதான். பெற்றாருக்கும் பிரச்சினை. பிள்ளைகளுக்கும் தான். பிள்ளையாரின் அருளையும் காளி ஆச்சியின் கருணைப் பார்வையையும் தண்டனைகளையும் பெத்தாச்சி தவறாது பஜனை முடிவில் கூறுவதனால் சிறார்களுக்கும் ஒரு வித மனப்பயம். அத்துடன் பிரசாதம் என வழங்கப்படும் பொங்கலும், சுண்டலும் தனி ருசி. பெத்தாச்சியின் கைப்பக்குவம்.

மார்கழி மாதம் வயல் வெளியில் நெற்பயிர்கள் குடலை வைக்கும் காலம். அதனால் கமக்காரர்களுக்கும் ஓரளவு ஓய்வு. இதனையும்

உணர்ந்தோ என்னவோ மார்கழி மாதத்தில் தினமும் மாலையில் திருவாசகப் படிப்பு. ஐம்பது வருசத்திற்கும் மேலாக தொடர்ந்து நடைபெறுகிறதாம்.

தினமும் மாலை வேளைகளில் அந்த ஊரிலுள்ள நாலைந்து பல்லில்லாததுகளால் ஓதப்படுவது வழக்கம். இது கோவில் கட்டிய காலத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவதனால் புதியவர்களின் பங்குபற்றுதல் இல்லாது விட்டாலும் தொடர்கின்றது. ஓதுவதற்கு ஆட்களே இல்லாத போதும் பெண்கள் படிக்கக் கூடாதாம். அது வேறு நீதி.. இது ஆண்களுக்குக் கிடைத்த சுதந்திரமும் கூட.. ஆம் அவர்களுக்கு மனைவியரின் நச்சரிப்பு இல்லாமல் ஊர் வம்பு கதைக்க உகந்த இடம்.. திருவாசகம் கேட்டால் கிடந்து அழுந்தாமல் போய்ச்சேரலாம்.. அதனால் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல்.. "திருவாசகம் கேட்பதற்கு" நல்ல வயோதிபர் கூட்டம்.. நாலைந்து சாமிப்போக்கான இளவட்டங்களும் வந்து சேர்ந்து விடும்.. எடுபிடிகளும் வேண்டும் தானே!

வயோதிப வட்டத்தில் தவறாது பங்கு பற்றுபவர்களில் கந்தசாமியரும் ஒருவர்.. கேட்பதற்கு மட்டும்.. வீட்டில் அன்னம்மாவின் நச்சரிப்பிலிருந்து கொஞ்ச நேரம் என்றாலும் இடைவேளை கிடைக்குமென இவற்றிற்கு மேலதிகமாக எண்ணி.. "திருவாசகம் கேட்பதற்கு" தவறாது தினமும் செல்பவர்.

உலகப் புதினங்கள் அதிகமானால்.. "திருவாசகம் கேட்டல்" நிறைவு பெற்றதன் பின்பும் தன்னை மறந்து ஊர் வம்பு கதைத்துக் கொண்டிருப்பதனால் வீட்டுக்கு வர கொஞ்சம் பிந்திவிடுவதும் உண்டு. அப்படியான நேரங்களில் அன்னம்மாவின் நச்சரிப்புக்கும் அதட்டலுக்கும் அன்றைய திருவாசகத்தில் எழுந்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவுபெறுதல் எனக்கூறி பதில் சொல்லும் பக்குவம்.. "திருவாசகம் கேட்டல்" மூலம் தான் கிடைத்தது என்று கந்தசாமியருக்கும் ஒரு நினைப்பு.

அன்றும் அப்படித்தான்.. அவர் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்த போது அன்னம்மா வெடித்துச் சிதறினாள். "அப்படி என்ன தான் திருவாசகத்திலே கொட்டிக் கிடக்குது. படிப்பு முடிந்ததன்

பிறகும் விளக்கங்கள் கேட்பதற்கு.. தினமும் கோயிலுக்குப் போய் முடியும் வரை உபதேசம் கேட்டு வருகிறீங்களே! உங்களுக்கு என்ன புரிந்தது.. எது விளங்கியது சொல்லுங்கோ..? .. நிலைமையைக் கந்தசாமியார் புரிந்து கொண்டார். யாரோ அன்னம்மாவின் காதுக்குப் பற்றவைத்து விட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டார்.

சமாளித்துக் கொண்டு.. "அது வந்து அன்னம்மா.. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால், தினமும் போய் கேட்டு வருவது நன்றாகவே இருக்கின்றது" என்று தட்டுத் தடுமாறிக் கூறினார்.

அன்னம்மா உக்கிர காளியானாள். "ஒவ்வொரு நாளும் போறது மட்டுமில்லை.. தெரியாதது விளங்காதது கேக்கிறன் எண்டு பிந்தி வந்திட்டு.. இப்ப ஒண்டும் தெரியேல்லை எண்டால். தெரியாததுக்காக.. விளங்காததற்கு எதற்காகப் போய் நேரத்தை வீணடிக்க வேண்டும்" ஒண்டுக்கும் வக்கில்லாததுகள்."

மௌனமே கந்தசாமியரின் பதிலாக இருந்தது.

"என்ன மூச்சையே காணேலை.. விளங்காததை நான் உங்களுக்கு வடிவாக விளங்கப்படுத்துகிறேன்.. சரி நான் சொல்லுறதைச் செய்யுங்கோ.. "வீட்டில இருக்கிற சல்லடையில் (அரிதட்டில்) தண்ணீர் நிரப்பி விட்டுக் கொண்டு வாருங்கள். நான் சொல்லித்தாறன்." என்றாள்.

என்ன செய்வது.. தன்னையே நொந்து கொண்டு ஒன்றும் புரியாதவராக கந்தசாமியாரும் சல்லடையில் (அரிதட்டு) தண்ணீர் எடுத்துக்கொண்டு வீடு முழுதும் சிந்தியபடியே வந்தார். மனைவியிடம் வந்த போது தண்ணீர் இல்லாமல் வெறும் அரிதட்டு மட்டுமே எஞ்சி இருந்தது.

"பாருங்கோ.. தினமும் தாமதமாகவே வருகிறீர்கள். நான் கேட்டால் திருவாசகத்துக்குப் போனேன் என்று வேறை சொல்லுறீங்கள்.. என்ன சொன்னார்கள் என்று கேட்டால்.. ஒன்றுமே தெரியவில்லை என்று சொல்லுறீங்கள். நீங்கள் திருவாசகம் கேட்கப்போற லட்சணம் இதோ இந்த சல்லடை (அரிதட்டில்) யில் ஊத்தின தண்ணீர் மாதிரித் தான்.

எதுக்கும் பிரயோசனம் கிடையாது", என்று அன்னம்மா பொரிந்து தள்ளினாள்.

கந்தசாமியாரின் எண்ணவோட்டம் ஓடியது. "அன்னம்மா.. ஓம்.. உண்மைதான்.. நீ சொல்லறது சரிதான். பார்த்தாயா நீயே சரியான உண்மையை வெளிக்காட்டியாய்."

அன்னம்மாவுக்கு கந்தசாமியரை மடக்கியதில் சந்தோசம்..

கந்தசாமியார் தொடர்ந்தார். "அன்னம்மா!.. நீ கூறியபடி சல்லடையில் (அரிதட்டில்) தண்ணீர் வேணுமென்றால்.. நிரப்ப முடியாமல் போகலாம். ஆனால், பார்த்தாயா அழுக்காக இருந்த சல்லடை (அரிதட்டு) இப்போ நன்றாகச் சுத்தமாகியிருக்கின்றது. அதைக் கவனித்தாயா..?"

"அதுபோலவேதான், கோயிலில் திருவாசகம் படித்தலின் போது சொல்லப்படுகின்ற விடயம் எனக்குப் புரியாமலிருக்கலாம். ஆனால் என்னுடைய மனதில் இருக்கிற அழுக்கையெல்லாம் படிப்படியாக அது அகற்றுவதை என்னால் நன்கு உணர முடிகிறது", என்று கந்தசாமியார் சொன்னார்.. இதைச் சற்றும் எதிர்பாராத அன்னம்மா மௌனமானாள்.

ஆம்.. புரிதலை விட தெளிதலே எப்பொழுதும் முக்கியம்...

**நன்றி – இணையம்**

# மகா தேவ ரகசியம்

வீதியில் இப்படித்தான் செல்ல வேணும், மேடையில் இப்படித்தான் பேச வேண்டும் மனிதன் உருவாக்கியிருக்கும் ஒழுங்குகளுக்கு இன்னொரு பெயர் விதி.

முற்பிறவிகளில் பலருக்கு கசப்பானவைகளை கொடுத்தால் அதற்கு பதிலாக தோஷத்தில் பிறந்து பிரதோஷ காலத்தில் கோவில்களில் எல்லோருக்கும் தேன் கொடுத்தால் தோஷம் நிவர்த்தியாகும்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடிக்கும் சக்தியுண்டு, குணமுண்டு.

அதிகாலை எழுபவனை வெல்வது கடினம்.

ஓம் என்னும் பிரணவத்துக்கு அதாவது பிரணவ ஒலிக்குள் தான் பிரபஞ்ச ரகசியம் உள்ளது.

நீ நான் என்றும் எல்லோரும் இதனுள் தான் அடக்கம்.

விருட்சம் என்றால் அழிவற்றது. காலத்தை எதிர்த்தும் கடந்தும் தொடர்ந்தும் வாழ வல்லது நன்மை மட்டும் செய்யக் கூடியது இந்த விருட்சத்துக்கு, மனிதனை, வாழ்க்கையை, மாற்ற காட்டும் சக்தி உண்டு.

போதி மரம் மட்டுமல்ல ஓதிய மரமும் கூட நமக்கு உயரிய உலக ஞானத்தை தரவல்லது.

விருட்சத்தை போஷிப்பவர்களின் பல கர்மங்கள் விருட்சங்களுக்கு அவன் விடும் நீரோடு சேர்ந்து கரைகின்றது.

108 வில்வ மரங்களை நட்டு வளர்த்து அதன் தழைகளை லிங்கத்துக்கு அர்ச்சனை செய். மரங்கள் வளர ஆரம்பிக்கும் போது உன்னிடம் செல்வமும் வளர ஆரம்பிக்கும்.

நாய்க்கு உணவு வைத்தால் வைரவர் திருவாக்குப்படி செவ்வரளியாக மாறுகின்றது.

பிள்ளையார் ஆஞ்சநேயரை சரணடைந்தால் துன்பங்கள் சிதறி போகும் வல்லாரை என்ற மூலிகை விசேடமானது அதற்கு மந்திரம் சொல்லித் தான் அதை கண்டு பிடிக்க முடியும்.

வைத்தியன் என்பவன் மனித உருவில் உள்ள கடவுள் ஜாதக ராசிகளின் படி வைத்தியனுக்கு வர அனுமதி முக்கியம் பூர்வ ஜென்ம பலனையும் பொறுத்து அதைக்கொண்டு மோட்ச சக்தி அடைய முயல வேண்டும். வியாதியால் வருகின்ற துன்பங்கள் என்பது ஒருவனின் கர்மவினை அதை புண்ணியமுள்ள வைத்தியனின் மருத்துவ பலன்தான் நீக்க முடியும். அதற்கு விலை வைப்பதும் தனது சேவையை பணத்துக்கு விற்பதும் மூலம் நோயாளர்களின் உபாதைக்கு காரணமான கர்ம வினை வைத்தியரின் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது. இப்படியானவர்களின் சந்ததிகள் பாதிக்கப்படுவர்.

60 வயது கடந்தவர்கள் கோள்களின் கருணை பெற்றவர்கள். ஜீவன் முக்தியடைய பல பிறவிகள் எடுக்க வேண்டும். பல காலம் தவம் செய்ய வேண்டும். பூ மரத்தில் இருந்து பூ எடுக்கும் போது மரத்துக்கு நன்றி சொல்ல வேண்டும். அடுத்த நொடி நம் கையில் இல்லை. எனவே இந்த நொடியை வாழ்ந்து பார்த்து விடுங்கள். பெற்றோர்களின் வாழ்க்கை என்பது குழந்தைகளின் பாடப்புத்தகமாக அமைகின்றது. நீங்கள் நல்ல பெற்றோர்களாக இல்லாத பட்சத்தில் உங்கள் குழந்தைகளின் எதிர் கால வாழ்க்கை கேள்விக்குறியாக மாறும். இதனை உங்களால் தடுக்க முடியாது. பிறருக்கு எடுத்துக்காட்டாக வாழ்வது தான் வாழ்க்கை.

# அறம்

"அறம் செய்ய விரும்பு" என்றார் ஔவையார். மானிட வாழ்க்கை நிலையற்றது என்று தெரிந்தும், வாழும் காலத்தில் அறவழியில் தான தருமங்களை விருப்புடன் செய்வதே மானிடப் பண்பாகும் என்ற அர்த்தத்தில் "அறம் செய்ய விரும்பு" என்று சுருக்கமாகச் சொல்லி வைத்தார் ஔவையார். திருவள்ளுவர் "அறன் வலியுறுத்தல்" என்ற அதிகாரத்தில் அறத்தின் சிறப்பை வலியுறுத்துகின்றார்.

*"சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊஉங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு"*

அதாவது தரும வழி என்ற ஒழுக்கம்தான் சிறப்பையும் செல்வத்தையும் மேலானதாக வழங்கும். ஆகையினால் தருமத்தைக் காட்டிலும் உயர்ந்தது எதுவும் இல்லை என்கிறார்.

அறத்தின் சிறப்பைக் கூறிய வள்ளுவனார்.......

*"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்"*

என்கின்றார். அதாவது பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கையும் கைவிட்டு வாழ்வதே தரும வழி.

இதை உணராமல் வாழும் சமுதாயத்தை எம் கண் முன் கண்டு கொண்டிருக்கின்றோம். இன்றைய மானிடம் பணம் சேர்ப்பதிலேயே ஆலாய்ப்பறந்து திரிகின்றது. எவருக்கும் உதவ விரும்பாதவனாக மற்றவனைச் சுரண்டி வாழுகின்றான் மனிதன்.

*"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்த*
*கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்*

*கூடுவிட்டு ஆவிதான் போனபின் யாரோ அனுபவிப்பார்*
*பாவிகாள் இந்தப் பணம்".*

தர்ம வழியிலே உழைத்து அதைத் தர்ம வழியிலே உதவுபவனே உண்மையான மனிதன்.

*"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
*செல்லும்வா யெல்லாம் செயல்"*

*"மனிதர்கள் முடியும் வழிகளில் எல்லாம் தருமத்தை விடாமல் செய்ய வேண்டும். அதுவே நிறைவான வாழ்வு தரும்"* என்கிறார் திருவள்ளுவர்.

*"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"* இங்கும் அறம் பேசப்படுகிறது.

இங்கு மகாத்மா காந்தி கூறிய கருத்துக்களைச் சற்று நோக்குவோம்.

"தொண்டு செய்வோர் தொண்டராவதால் தொண்டு எது என்பதை முதலில் ஆராய வேண்டும்." எல்லாப் பணிகளுக்கும் தொண்டு என்னும் சொல் வழங்கலாகாது. பிறர் நலம் கருதி ஆற்றப்படும் பணிகளுக்கே தொண்டு என்னும் சொல் பொருந்தும். ஆகவே தொண்டு செய்து அறத்தைப் பேணுவோம்.

மனிதனுடைய இல்வாழ்க்கையைப் பற்றி சொல்ல வந்த பொய்யா மொழிப் புலவர்,

*"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது"*

*"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
*பிறன்பழிப்பது இல்லாயின் நன்று"*

இது மட்டுமன்றி திருக்குறள் அறக்கருத்துக்களை வலியுறுத்தி

மக்களை மக்களாக வாழ வலியுறுத்தியுள்ளது. அண்மையில் ”அறம்” என்னும் திரைப்படத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்படத்தில் தாசில்தாராக நடித்த பிரபல கதாபாத்திரம் ஒரு கட்டத்தில் கூறிய கருத்துக்கள் உண்மையிலேயே அற்புதமான சிந்தனையைத் தூண்டிவிட்டன. ”பணம் இரு பிரிவினர்களை உருவாக்குகின்றது. ஒரு பிரிவினர் அடிமைகள் (ஏழைகள்) மற்றப் பிரிவினர் எஜமான்கள் (பணக்காரர்கள்). ஆனால் பணம் மனிதர்களை உருவாக்குவதில்லை.” மனிதர்கள் எப்படி அறத்துடன் வாழ வேண்டும் என்பதை இக்கருத்து உணர்த்தி நிற்கிறது.

**தம்பு சிவா**

# கண்ணப்பரின் பெருமை

**குலம்** - **வேடர்**
**பூசைகள்** - **தை மிருகசீரிடம்**
**அவதாரத்தலம்** - **உடுப்பூர்**
**முக்தி தலம்** - **திருக்காளத்தி**

*மேவலர் புரங்கள் சென்ற விடையவர் வேத வாய்மைக்*
*காவலர் திருக்காளத்திக் கண்ணப்பர் திருநாடென்*
*நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகி நின்ற*
*பூவலர் வாவி சோலை சூழ்ந்தபொத் தப்பி நாடு.*

அன்பின் திருவுருவம் கண்ணப்பர், அவர் திருவவதாரஞ் செய்த நாடு பொத்தப்பி நாடு. புலவர்கள் புகழ்ந்து போற்றுதற்குரிய நல்ல வளஞ் செறிந்த நறு மலர்ச் சோலைகள் நிரம்பிய அந்நாட்டின் தலை நகரம் உடுப்பூர் எனப்படும்.

நீண்ட மலைகளுக்கு இடையில் உள்ள அவ்வூரைச் சுற்றியானைத் தந்தங்களை வரிசையாக நட்டு வேலியமைத்திருக்கின்றார்கள்.

அங்கு வேடர்கள் வாழ்கின்றனர். வேடர்களுக்குத் தலைவன் நாகன், கண்ணப்பரைப் புதல்வராகப் பெறுவதற்குப் பண்டைய பிறப்பில் தவஞ் செய்தவன். ஆனாலும் பிறப்பின் தன்மையால் குற்றமே குணமாகக் கொண்டவன். கொடுமை புரிபவன், விற்றொழிலில் வலிமை மிக்கவன். ஆண் சிங்கம் போன்றவன். அவனுடைய மனைவியின் பெயர் தத்தை மறவர்களது பழங்குடியில் பிறந்த அவள் பெண் "சிங்கம் போன்றவள், புலிப்பல்லில் தாலி பூண்டவள். இனி கண்ணப்பரின் அவதாரத்தை நோக்குவோம்.

சிறப்பு வாய்ந்த நாகனுந் தந்தையும் வேடர்குலத் தலைமை பூண்டு வாழ்ந்தனர். மகப்பேறு இன்றி நெடுங்காலம் வருந்தினர். "இனி இவர்களுக்குப் பிள்ளைப்பேறு கிடைக்காது" என்று பலரும் கூறினர்.

மலைக்கு நாதராகிய முருகனை மனம் உருகி இருவரும் வழிபட்டனர். அதன் பயனாக முருகனின் திருவருளால் தத்தை கர்ப்பமுற்றாள். பத்தாவது திங்களில் வானவர் போற்ற உவர்க் கடலில் திங்கள் உதித்தது போல் தத்தை, புத்திரனையீன்றனள். வானவர் முத்து மழை பொழிந்தனர். வேடர் துடி முதலிய வாசித்து ஆனந்தமெய்தினர்.

நாகன் தன் புதல்வனை எடுத்து அனைத்து மகிழ்ந்தான். அண்ணலை ஏந்திய போது திண்மையாக இருந்த படியால் திண்ணன் என்னும் திருப் பெயரைச் சூட்டினான்.

திண்ணன் எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றார்.

வேடர் தலைவனாகிய நாகனுக்கு தளர்ந்த மூப்பு எய்தி மெலிவு பெற்றான்.

நாகன் "நான் முதுமைப் பருவமடைந்து விட்டேன். என்னால் வேட்டையாட இனி முடியாது" எனது அருமை மகனை உங்கட்குத் தலைவனாக்குவேன். அவனது தலைமையின் கீழ் நீங்கள் வாழுங்கள் என்றான்.

"ஐயனே! நாங்கள் இத்தனை காலமாக உமது ஆட்சியின் கீழ் இனிது தீங்கின்றி வாழ்ந்தோம். இனி இளவரசரது ஆட்சியின் கீழ் நிற்போம். அவரை அழைத்து ஆட்சியை வழங்கும்" என்றனர்.

ஆட்சி வழங்கியதும் முதல் முதலாக திண்ணனார் வேட்டைக்குரிய கோலங் கொண்டு நாணன், காடன் ஆகியோருடன் வனத்திற் சென்று வேட்டையாடினார்.

அப்பொழுது ஒரு பன்றி வேடரால் கட்டப்பட்ட வலைகள் அறும்படி மிகுந்த வேகமாய் ஓடிற்று. திண்ணனார் அதைத் தொடர்ந்து ஓடினார். பன்றி நெடுந்தூரம் ஓடியது.

அது மேலும் ஓட இயலாமல் களைப்புற்று ஒரு மலையடியில் உள்ள மரச் செறிவில் நின்றது. திண்ணனார் பன்றியைக் கண்டார். அதனிடம் நெருங்கினார். உடைவாளை உருவி அதைக் குத்தினார். திண்ணனாரைத் தொடர்ந்து வந்த நாணன், காடன் இருவரும் திண்ணனாரைப் புகழ்ந்து வணங்கி நின்றனர்.

அதன் பின் அவ்விருவரும் திண்ணனாரை நோக்கி "நாம் நெடுந்தூரம் வந்து விட்டோம், பசி நம்மை வருத்துகிறது. இப் பன்றியைச் சுட்டுத் தின்று, தண்ணீர் அருந்திப் பசி தனித்துக் கொள்வோம். அதன் பின்னர் வேட்டைக்குச் செல்வோம்." என்றனர்.

திண்ணனார், "தண்ணீர் இவ்வனத்தில் எங்கே இருக்கிறது" என்றார். "இப் பெரிய தேக்கமரச் சோலையைக் கடந்து சென்றால் நீண்ட மலைக்கருகில் பொன்முகலியாறு ஓடுகிறது."

"நாம் அங்கே போவோம் இப்பன்றியை எடுத்து வாருங்கள்" என்று கூறி, அவர்கள் அரைக்காத தூரஞ் சென்று கண்ணுதற் பெருமான் வாழ்கின்ற காளத்தி மலைச் சாரற் சோலையைக் கண்ணுற்றார்.

"நாணனே! நமக்கு முன் தோன்றும் இம் மலைக்குப் போவோம்" என்றார்.

*நாணனே தோன்றுங் குன்றில் நண்ணுவோம் என்ன நாணன்*
*காணநீ போதின் நல்ல காட்சியே காணும் இந்தச்*
*சேணுயர் திருக்கா ளத்தி மலை மிசையெழுந்து செவ்வே*
*கோணமில் குடும்மித் தேவர் இருப்பர்கும் பிடலாம் என்றான்.*

"இத்திருக்காளத்தி மலை மீது குடுமித்தேவர் இருக்கின்றார் கும்பிடலாம்" என்றான் நாணன்.

மூவரும் பொன்முகலி யாற்றினை அடைந்தார்கள். திண்ணனார் காடனை நோக்கி "நீ தீக்கடைக் கோலால் நெருப்பை உண்டாக்குவாய், நாங்கள் மலைக்குப் போய் வருவோம் என்றான்.

தேனீக்கள் செய்யும் ஓசையை கேட்ட வண்ணம் இன்பமான அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கியது. திண்ணனார் நிலை பெற்ற பெருங்காதலுடன் நீண்ட மலை மீது ஏறிச் செல்லுகிறார்.

*திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே*
*அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் மெய்தத்*
*தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்*
*பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன் புருவமானார்.*

இறைவனைச் சென்று இவர் காணா முன், கண்ணுதற் கடவுளுடைய கருணை நோக்கம் இவர் மேல் எய்தியது. அதனால் முன்னைப் பிறப்பின் சார்புகள் நீங்க, சிறந்த ஒளியின் நிழலிலே ஒப்பில்லாத அன்பு வடிவமாயினார்.

வள்ளுவர் கூறுவது போல்,

*அன்போ டிசைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு*
*என்போ டியைந்த தொடர்பு*

என்பதற்கிணங்க உயிரும் உடலும் போல் அன்பும் செயலும் இணைந்திருப்பதே உயர்ந்த பண்பு என்பது போல் திண்ணனார் விளங்கினார்.

இறைவன் மீது அன்பு கொண்டதனால் அவரைக் கண்டதும் இறைவன் தனித்திருக்கத் தான் பிரிவதற்கு மனம் இடம் தரவில்லை. ஆனாலும் போவார், மீண்டும் வருவார், வழுவிலா அன்புடன் தழுவிக் கொள்வார், காதலுடன் கடவுளை நோக்குவார். "நாதனே! நீர் அமுது செய்ய நல்ல மெல்லிறைச்சி நானே குற்றமறத் தெரிந்து கொணர்வேன்" என்று கூறுவார்.

*போதுவர் மீண்டு செல்வர் புல்லுவர் மீளப்*
*காதலி னோக்கி நிற்பர் கன்றகல் புனிற்றாப் போல்வர்*
*நாதனே யமுது செய்ய நல்லமெல் லிறைச்சி நானே*
*கோதறத் தெரிந்து வேறெ கொண்டிங்கு வருவேன்.*

நாணன் "காடனே! திண்ணன் மலைக் குடும்பித் தேவரை கண்டு அப்படியே அணைத்துக் கொண்டு வர மனமில்லாமல் இங்கு அத்தேவர் சாப்பிடுவதற்கு இறைச்சி கொண்டு போவதற்காக வந்திருக்கிறான்." என்றான்.

காடன் "திண்ணா", நீ என்ன காரியஞ் செய்தாய்? என்ன மயக்கம் கொண்டாய்? நீ எங்கள் தலைவனல்லையோ?" என்றான்.

காணவர் பெருமான் அவர்களை நோக்காது இறைவன் பால் அன்பு மிகுதியாய் "என்னில் இருப்பது எல்லாம் அவர் உடமையன்றோ" என்பதற்கு இணங்க, திருவள்ளுவரின் கருத்துக்கமைய

*"அன்பில்லார் எல்லாம் தமக்குரியர்*
*அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"*

என்று வள்ளுவம் கூறுவதற்கு அமைவாக அன்பில்லாதார் எல்லாம் தமக்கு உரிமை என்று நினைப்பர் அன்பு உடையவரே தம் எலும்பையும் பிறருக்கு அதாவது இறைவனுக்கு உரியதாக்கி மகிழ்வர். அது போல் திண்ணனார் விளங்கி, தனது செயலில் ஈடுபட்டார்.

பன்றியை நெருப்பில் வதக்கினார். வெந்த இறைச்சிகளை வாயிலிட்டு அதுக்கினார். அவற்றில் சுவையானவற்றைக் கல்லையில் ஒரு புறத்தில் வைத்தார். இச் செயல்களைப் பார்த்துக் கொண்டிருந்த நாணனும் காடனும் "இவருக்கு பித்து தலைக்கேறி விட்டது. நாம் என்ன செய்வது? நாகனையும் தேவராட்டியையும் அழைத்து வருவோம்" என்று உரைத்துச் சென்றனர். "இருவரும் சென்றது திண்ணனார்க்குத் தெரியாது" காரணம் அவர் இறைவன் மீது உயர் நிலை அன்பு கொண்டவராய், அதாவது திருவள்ளுவரின் குறளுக்கு அமைவாக

*அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு.*
*நின்றமையே!*

உயர்நிலை என்பது அன்பின் வழியாக அமைந்ததே அஃது இல்லாதவருக்கு எலும்பைத் தோல் போர்த்த உடம்பு மட்டுமேயாகும்.

எனவே, திண்ணனாரும் அன்பின் உயர் நிலையாக அமைந்திருந்ததனால் அவர்கள் சொன்னது, போனது, எதுவுமே அவருக்கு தெரிந்திருக்கவில்லை. அவர் செயல் முழுவதும் விரைவாக கல்லையில் ஊனமுது அமைத்து பெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்ட எண்ணி, பொன்முகலி யாற்றில் நல்ல நீரை தூய வாயினில் முகந்து, மலர்களைக் கொய்து தலைமயிரில் செருகி, ஒரு கையில் வில்லும் அம்புந் தாங்கி, மற்றொரு கையில் இறைச்சியையிட்ட கல்லையைத் தாங்கி, “எம்பெருமான் பசித்திருப்பாரோ” என்று இரங்கி, ஏங்கி, மிக மிக விரைவாகக் காளத்தி மலையை அடைந்தார்.

இறைவனுக்கு தான் வாயினில் கொண்டு சென்ற நீரை முடி மேல் உமிழ்ந்தார். தலை மயிரில் செருகிக் கொண்ட மலர்களை வணங்கி, சாத்தினார். ஊன் கல்லையை இறைவர் திருமுன் வைத்து, “ஐயனே! அமுது செய்தருளும்” என்று வேண்டினார்.

பொய்யா மொழிப் புலவர் கூறுவது போல் திண்ணனார் விளங்கினார்.

*அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து*
*இன்புற்றார் எய்துஞ் சிறப்பு*

உலகில் இன்புற்று வாழ்கின்றவர்க்கு வாய்க்கும் சிறப்பு, அவர் அன்புள்ளம் கொண்டவராக விளங்குவதன் பயனே என்று திண்ணனார் இறைவன் மீது அன்பு உருவாக நின்றார்.

*சார்வரு தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமும்*
*கார்வரை யடவி சேர்ந்துக் காணுதற் கரியார் தம்மை*

*ஆர்வமுன் பெருக ஆரா அன்பினிற் கண்டு கொண்டே*
*நேர்பெற நோக்கி நின்றார் நீளிருள் நீங்க நின்றார்.*

ஈசன் பக்கத்தில் வில்லைத் தாங்கி நேசமுடன் நின்று கொண்டிருந்தார்.

திருக்காளத்தி மலையில் இருள் நீங்கி இரவே இல்லாதொழிந்தது. வைகறையில் புள்ளினங்கள் ஒலித்தன. கண் துயிலாத வீரராகிய திண்ணனார் அது கேட்டு "இனி எம் பெருமானுக்கு அமுது கொண்டு வருவோம்" என்று சிறிது இருள் இருக்கும் போதே வள்ளலைத் தொழுது நீங்கினார்.

வழிபாடு புரியும் சிவச்சாரியார் "அந்தோ எந்தை முன்பு இந்த அநுசிதங்களை யார் செய்தனரோ? கெட்டேன்" என்று வருந்தினார்.

இவ்வாறு திண்ணப்பர் பகலில் வேட்டையாடுவார், இரவில் காவல் புரிவார். சிவகோசியாரும் நாள்தோறும் மனம் வருந்தி அநுசிதங்களை அகற்றி கும்பாபிஷேகம் புரிவார்.

இவ்வாறு நான்கு நாட்கள் கடந்தன. ஐந்தாவது நாள் அதிகாலை திண்ணனார் வேட்டையாடச் சென்றார். சிவகோசரியார் வந்து வழக்கம் போல் பவித்ரஞ் செய்து சிவாகம முறைப்படி பூசித்தார். பூசை முடிவில் "ஆலமுண்ட நீலகண்ட நிமலா! இவ்விடம் நாடோறும் உமது திருமுன் எலும்பும் இறைச்சியும் இட்டு அநுசிதம் செய்பவர் யாரோ? இத்தீமையை ஒழித்தருள வேண்டும்" என்று முறையிட்டார்.

அன்றிரவு, சிவகோசரியாரின் கனவில் கண்ணுதற் பெருமான் தோன்றி, " அப்பனே! நம்மிடம் வந்து பூசிப்பவனை வேடன் என்று நினையாதே அவனுடைய செயல்களைக் கூறுவோம் கேள்.

*அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்னும்*
*அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்*
*அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம் என்றும்*
*அவனுடைய நிலையிவ்வா றறிநீயென் றருள் செய்வார்.*

அவனுடைய வடிவம், அறிவு, பூசை, அன்பு இவை அனைத்தும் இனிமையாக இருக்கிறது. உருகிய அன்பு ஒழிவின்றி நிறைந்த அவன் வாயினிற் கொணர்ந்து உமிழும் தண்ணீர், கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களிலும் புனிதமானது. அவன் தலை மயிரிற் சொருகிக் கொண்டு வந்து சார்த்தும் மலருக்கு வானவர் சாத்தும் எம் மலர்களுக்கு இணையாகா, வெந்த ஊனைச் சுவை பார்க்கும் பொருட்டு மென்று பார்த்து இனியன என்று தேர்ந்து அவன் கொணர்ந்து இடும் ஊனமுது யாக அவியினும் எனக்கினியதாம். முனிவர்கள் கூறும் அன்பு மொழிகள் நல்லதாம். உனக்கு அவனுடைய செயலை நாளை காட்டுவோம். நீ ஒரு புறம் ஒளிந்திரு. அவனுடைய அன்பு முழுவதையும் காண்பாய் மனக்கவலையை விடு என்று அருள் புரிந்து மறைந்தருளினார்.

சிவகோசரியார் திடுக்கிட்டு எழுந்து கனவினை நினைவு கூர்ந்தார்.

அருணோதயமாயிற்று. திண்ணனார் வேட்டையாடச் சென்றார். சிவகோசரியார் பொன்முகலி நதியில் முழுகித் திருக்காளத்தி மலைமிசை ஏறிப் புரமெரித்த புண்ணியனைப் பூசித்துப் பின்புறமாக ஒளிந்தார்.

ஆறாவது நாளாகிய அன்று வழமை போல் வேட்டையாடி, ஊனமுதும், திருமஞ்சன நீரும், பூவும் எடுத்துக் கொண்டு திருக்காளத்தி அண்ணலிடம் வருகிறார். "இன்று அதிக நேரம் தாமதித்து விட்டேன். எம்பெருமான் பசித்திருப்பாரே?" என்று எண்ணி விரைந்து வரும் அவருக்கு பல தீய சகுனங்கள் எதிர்ப்பட்டன. "அந்தோ! இந்தச் சகுனங்கள் உதிரத்தைக் காட்டும். எம்பிரானுக்கு என்ன தீங்கு நேரிட்டதோ? கெட்டேன்! என்று வருந்தி ஓடி வந்தார்.

காளத்தியப்பர் திண்ணனாருடைய தூய அன்பை சிவகோசரியாருக்கு காட்டும் பொருட்டுத், தமது ஒரு திருக்கண்ணில் உதிரம் பெருகுமாறு செய்தார். அதனைத் தூரத்திலேயே கண்ட திண்ணனார் ஓடி வந்தார். "அந்தோ! என்று அலறினார், மயங்கி வீழ்ந்தார். வாயில் கொண்டு வந்த அபிஷேக நீர் சிந்தியது, கையிலிருந்த

ஊனமுதும் வில்லும் வீழ்ந்தன, தலையிலிருந்த மலர்கள் சிதறின.

எழுந்தார், உதிரத்தை துடைத்தார், உதிரம் ஒழுகுவது ஒழியவில்லை. என்ன செய்வது? என்று அறியாது திகைத்தார். "இத் தீமையைச் செய்தார் யாரோ?" என அப்பெரிய குன்றின் சாரலில் நெடுந்தூரந் தேடிச் சென்றார். யாரையும் காணவில்லை.

மீண்டும் ஆண்டவர் பால் வந்தார். கண்ணுதலார் பாதம் பற்றித் தழுவிக் கொண்டு கண்ணீர் சொரிந்து கதறினார்.

பரமனார்க்கு மருந்து தேடிக் கொணர்வேன் என்று வேறு வேறு வனங்களிற்கு சென்று மூலிகை மருந்தைக் கொண்டு வந்து கண்ணில் பிழிந்து வார்த்தார். ஆனாலும் உதிரம் வடிவது நிற்கவில்லை. "இனி இந்த நிலைக்கு என் செய்வேன்" என்று ஏங்கினார். "ஊனுக்கு ஊன் உற்றநோய் தீர்க்கும்" பழமொழிக்கு அமைவாக அம்பினை எடுத்துத் தமது வலக் கண்ணை அகழ்ந்து அப்பினார். குருதி நின்று விட்டது. அதைக் கண்ட திண்ணனார் கூத்தாடினார்.

கருணையே வடிவான இறைவர், கண்ணிடந் தப்பிய வள்ளலாருடைய அன்பின் நலத்தினைப் பின்னும் காட்டுமாறு திருவுளங் கொண்டு மற்றையிடக் கண்ணிலும் உதிரம் வருமாறு செய்தனர்.

திண்ணனார் கண்டார் "ஆ! கெட்டேன், ஒரு கண் குருதி நின்று நலப்பட்டது. மற்றொரு கண்ணில் குருதி வருகின்றது. இதற்கு நான் அஞ்சேன். இன்னும் எனக்கு ஒரு கண்ணிருக்கிறது. அக் கண்ணையும் இடந்து அப்புவேன்" என்று எண்ணினார்.

தனது இடக்காலை இறைவருடைய கண்ணுக்கு அருகில் ஊன்றிக் கொண்டு, மிகுந்த விருப்பத்தோடு ஒரு கணையெடுத்துத் திண்ணனார் கண்ணில் ஊன்றினார். அதைக் கண்டு தேவ தேவர் தரித்திலர்.

*செங்கண்வெள் விடையின் பாகர் திண்ணனார் தம்மை யாண்ட*
*அங்கணர் திருக்காளத்தி யற்புதர் திருக்கை யம்பால்*
*தங்கண்முன் இடக்குங் கையைத் தடுக்க முன் றடுக்கு நாக*
*கங்கணர் அமுத வாக்குக் கண்ணப்ப நிற்க வென்றே*

"நில்லு கண்ணப்பா! நில்லு கண்ணப்பா! என் அன்புடைத் தோன்றலே நில்லு கண்ணப்பா" என்று கூறித் தடுத்தருளினர்.

கண்ணப்பர் தன் முதற் கண் அகலும் போது சிவன் தடுக்கவில்லை, ஏனென்றால் முதல் முதல் பார்த்த கண் சிவனின் கண். எனவே சிவனுக்கு கருணை பிறக்கவில்லை. இரண்டாவது கண்ணை அகற்றும் போது நில் கண்ணப்பா! என்று கூறியது கண்ணப்பனின் கண்ணால் சிவன் பார்த்ததால் தரித்திலர் தேவர் என்றார்.

கண்ணப்பனின் அருமை அன்பை தெரிந்து கொள்வதற்குக் கூட சிவனுக்கு கண்ணப்பனின் கண்தான் உதவியது. இதில் இருந்து இறைவன் அடியவர்களிடம் தோற்பதில் தான் வெற்றியிருக்கிறது என்பதை யாம் புரிந்தாக வேண்டும்.

கானவர் பெருமா னார்தங் கண்ணிடந் தப்பும் போதும்
ஊனமு துகந்த ஐயர் உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார் நான்முகன் முதலாயுள்ள
வானவர் வளர் பூ மாரி பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப

கானவர் பெருமானார் கண்ணிடந் தம்பியதையும், ஊனுகந்த ஐயர் தமது திருக்கரத்தால் தகைந்து மாலயனாதி வானவர் பூ மழை பொழிந்தனர். மறைகள் ஆர்த்தன.

காளத்தியப்பரருகில் கண்ணப்பர் நிலை பெற்று நிற்பாராயினார்.

ஆக்கம் :
**செல்வி நாகேஸ்வரி வடிவேற்பிள்ளை**

# சமயங்களின் தத்துவம்

நாம் வாழும் இப் பூமியின் படைப்பு அதி அற்புதமானது. பூமியில் பல்வேறுப்பட்ட பொருட்களைக் காண்கின்றோம். எங்களையும் உள் அடக்கித்தான். இவற்றை சற்று நேரம் ஒதுக்கி, கூர்ந்து ஆராய்ந்தால் அவை ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வொரு உண்மையை நாம் அறியலாம். இப் பிரபஞ்சத்திலே ஒரு பொருளை முற்றிலும் ஒத்திருக்கிற மற்றொரு பொருளைக் காண்பதரிது. உயிர் வாழ்வன, உயிர் அற்றன ஆகிய அனைத்துக்கும் இது பொதுவான உண்மை. இந்தப் பேதத்தை உருவாக்குவது, சிருஷ்டி, படைத்தவன் படைத்திருக்கும் திறமைக்கு இந்த வேறுபாடே சான்றாகின்றது.

சமயங்களும் அவ்வாறே. உள்ளத்தின் இயல்புக்கேற்றவாறு சமயங்களும் பல தரப்படுகின்றன. உடல் வேற்றுமையை விட உள வேற்றுமையே மனிதனைத் தரம் பிரிக்கக் கொண்டு அறியப்படுகின்றது. சான்றோர்களை உருவாக்குவதே சமயங்களின் சிறப்பு நோக்கமாகும். இறைவனது பேரருளுக்குப் பாத்திரமான இந்த மகான்கள் வையத்தில் என்றென்றும் வாழ்வாங்கு வாழ்கின்றார்கள். ஒன்று அவர்களது வரலாறு, அவர்களது தூய வாழ்வில் இடம் பெற்ற இறைவனின் அருட் செயல்கள்.

இரண்டாவது, அவர்கள் தமது தெய்வானுபவங்களை வைத்து ஆக்கித் தந்த நூல் வகைகள், பாடல்கள், தோத்திரங்கள் என்பனவாம்.

உதாரணமாக, எமது சமயத்தை எடுத்துக் கொள்ளுங்கள், நாயன்மார்கள், அனுபூதிமான்கள், இன்றும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். உதாரணமாக, ஞானசம்பந்தர், அப்பர் சுவாமிகள், சுந்தரர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர் இவர்களது தேவாரப் பதிகங்கள், திருவாசகம், திருக்கோவையார், திருப்புகழ், தாயுமானவர்பாடல்கள், பட்டினத்தார்பாடல்கள், இராமலிங்கசுவாமிகள்

பாடல்கள் யாவும் எமது மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதுடன் எம்மையும் வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன.

தேவார திருவாசகங்கள் எமது சைவசமயத்தைப் பொறுத்தமட்டில், ஆத்ம சாதகனுக்கரிய அருட் பொக்கிஷங்களாக உள்ளன. உதாரணமாக, திருவாசகத்தை எடுத்துக் கொள்வோம். திருவாசகம் படிப்பவனுக்கு அவனது பக்குவத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. எவ்வாறு தரையில் விழுந்த ஒரு மீனானது. தனது சொந்த நீர்ப்பரப்பை விட்டு விலகியதை உணர்ந்து, துள்ளித் துடித்து, பின் சதுப்பு நிலத்தை எட்டி விட்டால் சிறிது ஆறுதல் பெற்று, மேலும் ஒரு நீர் நிலையை அடைந்தால் கொஞ்சம் நிம்மதி பெற்று, மீண்டும் அதனது எத்தனத்தில் ஒரு ஆற்றையோ ஆழ்கடலையோ அடைந்தால் தனக்கேற்ற வீடு கிடைத்தாற் போல் நிம்மதி அடைகிறதோ, அதே போன்று தான், இறைவனைப் பிரிந்து வந்த ஆத்மாவின் நிலையும், கடவுளிடமிருந்து பிரிந்து பிரபஞ்ச வாழ்வுக்கு வந்துள்ள மனிதனது ஆத்மாவின் நிலையும் இதுவேதான். தெய்வநிலை பெற அவன் பல பிறவிகளில் பல்வேறு அல்லல்களை, நிலைகளைத் தாண்டி ஈற்றில்,

"மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" என்று அவனது முடிவான நிலையை எய்துகின்றான். ஆதியோடு அந்தமாக, இச் சகல நிலைகளிலும் வழிபாட்டுக்கு அவனுக்கு உதவுபவை பக்திச் சுவை தோய்ந்த தேவார திருவாசகப் பாடல்களாகும்.

எனவே, நாமும் எமது அன்றாட வாழ்வில் தினமும் சிறிதளவு நேரத்தைத் தேவார திருவாசகம் ஓதுவதற்கு ஒதுக்குவோம்.

ஆக்கம் : **கலாபூஷணம்**
**திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** (M.A)

# நம்பியாண்டார் நம்பியின் பங்களிப்பும் சேக்கிழார் விரிநூலும்

**சேக்கிழார் பெரியபுராணச்சிறப்புக்கு முக்கிய காரணமாயிருந்தவர் நம்பியாண்டார் நம்பி**

சைவத்திருமுறைகளைத் தேடித் தொகுத்தும், தமிழ் மொழியில் அத்தமிழ் வேதங்களை உலகறியச் செய்தும், இன்று வரை திருமுறைகள் பண்ணோடு பாடப்படக் காரணமானவருமான நம்பியாண்டார் நம்பி. இராஜராஜ சோழன் காலத்தவர். சமயாசாரியர்களிலொருவரான சுந்தரமூர்த்தி நாயனார், தொண்டர்களைப் போற்றி அவர்கள் திருநாமங்களைக் குறித்துப் பாடிய "திருத்தொண்டத் தொகையே, நம்பியார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் திருமுறையையும் சற்று விரித்துப் பாட வழிவகுத்தது. பல்லவர் காலத்தில் வாழ்ந்து தமிழ் அருளிய சுந்தரருக்குப் பிறகு பத்தாம் நூற்றாண்டு இராஜராஜ சோழனின் வேண்டுகோட்படி, திருமுறைகளை அறிந்து, அவற்றினை ஆராய்ந்தறிந்து அகச்சான்றுகளால் தொண்டர்களின் வரலாற்றைத் துலக்கிய நம்பியாண்டாருக்குப் பின் பல ஆண்டுகளுக்குப் பின்வந்த சேக்கிழார் தொண்டர்கள் வரலாற்றை அநபாயனின் அரச அனுசரணையுடன் விரித்துரைத்துரைத்தார். தமிழ் வியாசரான நம்பியாண்டார் நம்பி சொன்ன அடிப்படைத் தகவல்களை நிலைக்களனாக்கி பன்னிராண்டாந் திருமுறை என சேக்கிழார் விரித்த பெரியபுராணத்துக்கு நம் நம்பியாண்டார் நம்பி அளித்த பங்கு பணிகளை சைவமரபும், தமிழுலகும் நன்றியுணர்வோடு மதிக்கப்பட வேண்டியவை என்பதை அழுத்துவதே இக்கட்டுரையின் ஆதங்கமாகும். நாரையூர்ப் பொள்ளாப்பிள்ளையார் ஞானத் திருவருள் பெற்று, எம்பெருமான் உள் நின்றுணர்த்த நம்பியடிகள், தொண்டர்களின் செய்திகளைப் பேசும் திருத்தொண்டர் திருவந்தாதி

எனும் நூலுடன், விநாயகர் திருவிரட்டை மணிமாலை முதல் 10 நூல்களையும் சைவத்தமிழ் உலகுக்கு ஈந்த பெருமைக்குரியவரும் திருமுறைகளைத் தொகுத்தவரும் தேவார மூவர் மீதும் அளவற்ற அன்பும், பக்தியும் கொண்டவரும் நம்பியாண்டார் நம்பி ஆவார். திருஞானசம்பந்த சுவாமிகள் மீது ஆறு பிரபந்த நூல்களை அருளி அவர் தந்த அடிப்படைதான் சேக்கிழாரும் தம் திருத்தொண்டர் புராணத்திலும் ஞானசம்பந்தரைக் குறித்து அதிகம் பாடல்களைச் செய்ய வழிவகுத்தது. "பிள்ளை பாதி, புராணம் பாதி" என்று பெரியபுராணம் சிறப்பித்துப் பேசப்படுவது இதனாற்றான். இதுபோலவே நம்பியாண்டார் திருநாவுக்கரசர் சுவாமிகள் மேலும் திருஏகாதச மாலை என்றொரு திருமுறை நூல் செய்தார். திருத்தொண்டர் திருவந்தாதியே சுந்தரரையும், அவர் பெற்றோரையும் தம் பாடல்களில் இணைத்து அறுபான்மும்மை அடியார்கள் என்ற பெரியபுராணத் தொண்டர் மரபை தோற்றுவித்தது.

*"பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழைக்கை முக*
*மன்ன னறுபத்து மூவர் பதிதே மரபு செயல்*
*பன்னவத் தொண்டர்தொகை, வகைபல்குமந் தாதிதனைச்*
*சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத்துணை துணையே"*

என அமைந்த கலித்துறைத் திருவந்தாதி இதனைக் குறிப்பிடுவதை நோக்கலாம். தில்லையில மர்ந்த அந்திப் பிறை அணிந்த பெருமான் மேலும் "கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தம்" என்ற பெயரில் ஒரு அருட்திருமுறை தந்த நம்பியாண்டார் திருமுறைகளைக் காண்பித்ததுடன், தம் தொண்டர்களின் பெருமையையும் தமக்கு உணர்த்தியதும் தில்லைப்பிரானே என்றும் கூறுவார். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு நன்றியுணர்வோடு போற்றி செய்யும் நாரையூர் நம்பியடிகள், மானுட உடம்போடு இறைவன் தாளடைந்தவர்களின் பெருமையை சுந்தரர் தமக்கு அறியத்தந்தமையை பின்வருமாறு ஏத்துகிறார்.

*"ஞானவவாரூரரசரையல்லது நாமறியோம்*
*மானவ வாக்கை யொடும்புக்கவரை வளரொளிப்பூண்*

*வானவராலும் அறிதற்கரிய வடகயிலைக்*
*கோனவன் கோயிற் பெருந் தவத்தோர் தங்கள் கூட்டத்திலே"*

என்பது அப்பாடல் ஆகும்.

சுந்தரர் தொகை நூல் செய்ய, அதை வகை நூலாக வகுத்தமைத்து, பல செய்திகளை உவந்ததோடு, நம்பிகளே கண்டெடுத்துக் காட்டிய மூவர் தேவாரங்களின் அகச்சான்றுகளையும் கொண்டு தம் திருத்தொண்டர் புராணத்தை, ஆக்கக் காரணமான நம்பியை சேக்கிழார் பெருமான், பின்வருமாறு ஒரு பாடல் மூலமே குறிப்பிடுகிறார். தாம் திருத்தொண்டர்களின் திவ்விய வரலாற்றைச் செப்ப உதவிய நம்பியடிகளை அவர் நன்றி செய்யும் பாங்கினை பின்வரும் பெரியபுராணப் பாயிரப் பாடலில் கூறுகிறார் சேக்கிழார்,

*"அந்த மெய்ப்பதிகத்து அடியார்களை*
*நந்தம் நாதனாம் நம்பியாண்டார் நம்பி*
*புந்தி ஆரப்புகன்ற வகையினால்*
*வந்த பேறு வழாமல் இயம்புவாம்"*

சுந்தரமூர்த்தி நாயனார் தம் மூல நூலிலே குறிப்பிட்ட 60 நாயன்மார்களோடு பதினோராவது பாடலில் சடையனார் இசைஞானியார் ஆகிய தம் பெற்றோரோடு, தமது அடிமைத் திறத்தையும் குறிப்பிட்ட காரணத்தால் தனியடியின் தொகை 63 ஆகியது. சேக்கிழார், நம்பியாண்டார் நம்பி வகுத்துத் தந்த வகையில், முறைமை வழுவாமல் புராணம் இயம்புவதாக ஒப்புக்கொள்ளும் இடம் நோக்கற்பாலது.

மூல நூல் திருத்தொண்டர் தொகையை அருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை சேக்கிழார் போற்றுமுகத்தான், தம் புராணத்தின் முதல், இடை, கடை ஆகிய இடங்களிலே அவரின் வரலாற்றை விரித்துச் சொல்லுகிறார். அத்தோடு ஒவ்வொரு சருக்கத்திலும், அடிக்கடியும் அவசியமாகவும் நன்றி சொல்லுகின்றார் சேக்கிழார்.

சுந்தரரை அடியொற்றி விரிந்த, சேக்கிழார் படைத்த பெரிய புராணத்தில், முதல் சைவக் காப்பியத்தில் "திருவாளன்" என சுந்தரர் வாசமலர் மென் கழலை வழுத்தும் சேக்கிழார்.

*"தேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்து*
*ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழஎடுத்து*
*தேசம் உய்யத் தொண்டத்தொகை முன் பணித்த திருவாளன்*
*வாசமலர் மென்கழல் வணங்க, வந்த பிறப்பை வணங்குவாம்"*

என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறு முதலில் சுந்தரர்பெருமான் வரிசைப்படுத்திய நாயன்மாரின் நாமங்களை அடியொற்றி, தம் திருத்தொண்டர் திருவந்தாதியிலும் அதே வரிசையில், தொண்டர் பெருமையைச் சற்று விரித்துரைத்த நம்பியாண்டார், பற்றி ஆராய்கையில் நம்பியாண்டார் தேடலில், சேக்கிழார் குறிப்பிடாத மணிவாசக சுவாமிகளும் அகப்பட்டிருப்பது எம் மலர்க்கு அருவிருந்தான செய்தியாகும். சுந்தரர் மணிவாசகரை அறிந்திருக்கவில்லை என்றோ அவர் காலத்துக்கு முன்போ பின்போ மணிவாசகர் திருவாசகம் பாடினார் என்பதை ஆராய்வதைவிட, தம் கோவில் திருப்பண்ணியர் விருத்தத்தில் குறித்தெழுதிய மணிவாசகரை, பிற்காலத்திலே வாழ்ந்து, சைவமரபு வளர்ச்சியில், வரலாற்றுத் தகவல்களை விரித்த பெரியபுராணச் சேக்கிழார் ஏதோ ஒரு இடத்தில் தானும், தனக்கு முன்னே வாழ்ந்து சாயுச்சிய நெறியில் சிவன் தாளடைந்த சமயாசாரியர் திருவாதவூர்ப் பாத்தியனான மணிவாசகரைக் குறிப்பிட்டிருக்கலாம் என்பதுதான் எல்லோருடைய ஆதங்கமாய் இன்று வரை இருக்கிறது. சேக்கிழாருக்கு முன்னமே வாழ்ந்து சிவம் பெருக்கிய மணிவாசகரை ஏன் சேக்கிழார் அலட்சியம் செய்தார்! தமக்கு சுந்தரரும், நம்பியாண்டாரும் தந்த வரன்முறையில் இருந்து தவற, அல்லது மேலதிகமாக எதுவும் சொல்ல விரும்பவில்லை என்பது தான் காரணமா அன்றி சேக்கிழாருக்கும் பிற்பட்டுத்தான் மணிவாசகர் வாழ்ந்து விட்டாரா? திருவாசகத்தையும் அறியவில்லையா என்பது சிந்திப்பதற்குரியது. மேலாக, கோயில் திருப்பண்ணியர் விருத்தம்

என்ற நூலில், நம் நம்பியாண்டார் நம்பி, திருவாதவூர்ப்பாத்தியன் பற்றிக் குறித்த பாடலையும் இங்கு பதிவு செய்கிறேன். அது இந் நூலின் ருஅ: 58 வது பாடல். உ.வே. சாமிநாதையர், பாத்தியன் என்ற சொல் மணிமேகலையில் வந்ததாகச் சொல்வதோடு, மணிவாசகர் அவ்வாறு அழைக்கப்பட்டமையை தம் ஆய்வில் உறுதி செய்தும் உள்ளார். மணிவாசகரை திருத்தொண்டர்களில் - புராணம் சேர்த்துக் கொள்ளாமை பற்றிய ஆசங்கைகள் இன்றும் ஆராயப்பட்டுக் கொண்டே உள்ளன. மணிவாசகர் காலம் மறைமலையடிகள், வி.க. போன்றோர் கருத்துப்படி 2, 3 ஆம் நூற்றாண்டென்றும், சுந்தரர் காலத்தின் முன் வாழ்ந்தவரென்றும் அமைய, அவர் 9 ஆம் நூற்றாண்டுக்குரியவரென்பர் சிலர்.

திருமுறைகளைத் தேடித்தொகுக்கும் பணியிலீடுபட்ட, தமிழ் வியாசரான நம்பியாண்டார், பாத்தியன் அருளிய திருச்சிற்றம்பலக் கோவையை, திருவாதவூர் மணிவாசகப் பெருமானின் பெருமையைப் பேசும் பாங்கிலே தமது கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில் பின்வரும் பாடல் மூலம் தந்திருக்கும் பாடலை சேக்கிழாரும் அறிந்திருப்பாரோ!

*"வருவாசகத்தினில் முற்றுணர்ந்தோன் தில்லை மன்னைத்*
*தருவாதவூர்ச் சிவபாத்தியன் செய் திருச்சிற்றம்பலப்*
*பொருளார் தரு திருக்கோவைகண்டேயும் மற்றப்பொருளைத்*
*தெருளாத வுள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே"*

*நன்றி*

**நம்பியாண்டார் நம்பி**

**(திருமுறை - II)**

ஆக்கம் : **புலவர் கலைமாமணி**

M.S. **ஸ்ரீதயாளன் அவர்கள்**

*ஆய்வுநிறைஞர் கொ.த.ச. இலக்கியச் செயலர்*

# மண்ணின் தேவதைகள்

தமிழ்ப் பெண் என்ற பதம், பாலினத்தை மட்டுமன்றி எமது மொழியையும் மரபையும் அதனுடன் உணர்த்தி நிற்பது.. தொன்மையான நாகரிகம் ஒன்றின் வழி வந்தோர் என்ற வகையில், தமிழ்ப்பெண் என்ற சொல்லுக்கு நீண்டகாலத் தொடர்ச்சி கொண்ட அடையாளங்கள் உள்ளன. அவை, மரபு வழி எமக்குக் கையளிக்கப்பட்டவை. தனித் தமிழரது மரபு, பெண்ணை வலிமையானவளாக நோக்குவது. அவளைத் துணிவானவளாகச் சித்திரிப்பது! அவ்வழியே, அவள், தற்றுணிபும் சுயமும் கொண்டவளாக முடிவெடுக்கும் ஆற்றல் கொண்டவளாக வாழ்ந்தாள் என தமிழரது வரலாறு பதிவு செய்துள்ளது. காலத்தால் மூத்த தொல்லியல், மானுடவியல், இலக்கியச் சான்றுகளில் நாம் இவற்றுக்கான பதிவுகளைக் கண்டுகொள்ளலாம். அந்த உயர்மரபின் நீட்சியாகவே தமிழ்ப்பெண்ணிடம் எதையும் திடமாக எதிர்நோக்கும் ஆற்றல் இன்றுவரை பொதிந்துள்ளது.

இன்று கோளமயமாக்கப்பட்ட உலகில், எம்மைச் சுற்றி இடையறாது நிகழும் மாற்றங்களால் நாம் வாழும் புறச்சூழல் மட்டுமன்றி எமது அகமும் பெரும் சலனங்களை எதிர்கொள்கின்றது. காலாகாலமாக, நம்முடையது என நாம் வரித்துக்கொண்ட - அல்லது எமக்குத் தொகுத்து வழங்கப்பட்ட கலாசாரம், இன்று புதிய சவால்களை எதிர்கொண்டுள்ளது. மிகவும் சிக்கலான வடிவத்தைப் பெற்றுள்ளது. உலகளாவிய வகையில், புலச்சிதறலுக்கு உள்ளான மனித இனக்குழுமங்கள் பல, "அடையாளச்சிக்கல்" (Identity Crisis) ஒன்றினை எதிர்நோக்குகின்றன. தமிழ்ச் சமூகமும் குறிப்பாக தமிழ்ப் பெண்களும் அதற்கு விதிவிலக்கல்ல.

ஒரு இனக்குழுமத்தின் அடையாளத்தைத் தீர்மானிக்கின்ற அடிப்படை விடயங்களாக, அவர்களது மொழி, நடத்தைக்

கோலங்கள், நம்பிக்கைகள் முதலியன அறியப்படுகின்றன. கடந்த காலத்தில், தமிழர்கள் எனும் இனக்குழுமத்தினர், உலகெங்கும் சிதறிப்பரவி, தமக்கு முற்றிலும் புதிய, அந்நியமான வாழ்வியலுக்குள் சங்கமித்தனர். அவ்வாறு அவர்கள் வாழத்தொடங்கி இன்று பல தசாப்தங்கள் கடந்துவிட்டன. உடலும் உள்ளமும் ஓரிடத்தில் ஒட்டி வாழ இயலாது மனவடுக்களைச் சுமந்து வாழ்ந்த அத்தலைமுறையின் அடுத்த சந்ததி இன்று அந்த மண்ணிலேயே பிறந்து வளர்கின்றது. எனவேதான் புதிய தலைமுறையானது, பல் கலாசாரச் சூழலில் தமது அடையாளத்தைத் தொடர்ந்து பேணுதலில் இடர்ப்பாடுகள் பலவற்றை எதிர்கொள்கின்றது.

இன்றைய வாழ்க்கை, பல கூறுகளாகத் துண்டாடப்பட்ட ஒன்று என்பது கண்கூடு. வாழ்க்கைப் போக்குகள் தலைகீழாக மாறி வருகின்றன. சமூக ஊடகங்களே எம் சிந்தனையைக் கட்டமைக்கின்றன. எமது நடத்தையையும் வடிவமைக்கின்றன. எமது சுயசிந்தனைக்கான ஊற்றுக்கண்கள் அடைக்கப்பட்டு விட்டன. எனவேதான், அவற்றைப் புறந்தள்ளி, புறவுலகின் அழுத்தங்களை வெற்றிகரமாக எதிர்கொள்கின்ற துணிவும் அறிவும் முன்னரைவிட பன்மடங்கு அதிகமாகத் தேவைப்படுகின்றன. அதனை இன்றைய தலைமுறைத் தமிழ்ப்பெண்கள் நன்க உணர்ந்துள்ளனர்.

சமூக ஊடகங்களால் வெறும் அழகுப்பதுமைகளாகச் சித்திரிக்கப்படுவதும் சந்தைப் பொருளாகக் காட்டப்படுவதும் பெண்ணின் உண்மையான அடையாளமல்ல! அதற்கும் மேலாக, பெண்ணுக்குள் புதைந்திருக்கும் பேராற்றலும், காலத்திற்கேற்ற கல்வியறிவும் ஒருங்கே கொண்டிருத்தலே, இன்றைய தமிழ்ப் பெண்ணின் போற்றுதலுக்குரிய பண்புகளாகின்றன. இவற்றின் துணைகொண்டு தனது சுயம் இழக்காமல் அதேசமயம் தான் வாழும் சூழலுடன் இயைந்து வாழ்தல் பெண்ணுக்குச் சாத்தியமாகலாம்.

சொந்த நாட்டிலோ அல்லது புலம்பெயர் நாட்டிலோ, நாளாந்த வாழ்வில் பெண்ணுக்கு இழைக்கப்படுகின்ற துரோகங்கள், அவள் மீதான அத்துமீறல்கள், அவதூறுகள் அனைத்தையும் கையாளுகின்ற


மனோபலமும் தன்னம்பிக்கையும் தமிழ்ப்பெண்ணிடம் என்றும் உண்டு! தமிழ்ப்பெண்ணின் பாரம்பரியம் மனம் அதற்குப் பயிற்றப்பட்டுள்ளது. அதேசமயம் புதிது புதிதாக முளைக்கின்ற சமூகச் சிக்கல்கள், பிறழ்வுபட்ட சிந்தனைகள் என்பவற்றைத் துணிவுடன் கடந்து செல்வதற்கும் இன்றைய தலைமுறைத் தமிழ்ப்பெண்ணால் முடியும். அவளது தனித்துவமான பண்பு நலன்களும், ஆளுமையும், காலத்தாலும் பல் கலாசாரச் சூழலின் தாக்கத்தாலும் அழிக்க முடியாதவை. அவற்றைச் செவ்வனே கையாள்வதற்கு பெண் தன்னைத் தகவமைத்துக் கொள்கின்றாள். அதுவே செய்யத் தகுந்ததுமாகும்.

இன்று பல் கலாசாரச் சூழலில் உலகம் எனும் பெரியதொரு குடும்பத்தில் வாழும்போது, சுற்றமும் குடியும் தழுவி வாழ்வதற்கு அன்பு, கருணை, உயிர்கட்கிரங்கல் என்ற பண்புகள் தேவைப்படுகின்றன. தன்னைத் தற்காத்தலுடன் சமூகத்தின் நலன் காத்தலும் தமிழ்ப்பெண்ணின் பெரும்பண்புகளுள் அடங்கும். ”உலகமே ஒரு குடும்பம்” என்ற பரந்த சிந்தனையை உரக்கக் கூறிய தமிழரின் வழித்தோன்றல்தான் இன்றைய தமிழ்ப்பெண். ஆதலால், மனிதநேயம் என்ற கருத்து நிலை அவளுக்கு ஒன்றும் புதியதன்று. இன்றைய உலகிற்குத் தேவையான பரந்த சிந்தனையுடன் செயற்படுவதற்கு அவள் என்றும் தயாராகவே இருக்கின்றாள்.

என்றுமே இயற்கையோடு இயைந்த வாழ்வை விழைந்தது தமிழர் பண்பு. எமது பெண்களும் உலகில் எங்கு வாழ்ந்தாலும், தம்மை அறிந்தவர்களாய், தாம் வாழும் உலகைப் புரிந்துகொண்டவர்களாய், சமூக நீதிக்காய் குரல் கொடுப்போராய் தம்மை அடையாளப்படுத்தி நிமிர்ந்து நிற்பர். அவர்கள், வானில் உலவும் பெண்களல்லர்! மண்ணில் கால் பதித்து நடக்கும் தேவதைகள்!

**வசந்தி தயாபரன்**

# சிந்தை மகிழவைத்த சீர்காழி கோவிந்தராஜன் (19.01.1933-23.03.1988)



எவ்வாறு மேன்மக்கள் வாழ்க்கையில் முன்னேறி வெவ்வேறு துறைகளில் பெரும் புகழ்பெறும் போது அவரவரின் ஊரின் பெயர் அவரவருடன் ஒட்டிக்கொள்ளுமோ அதேபோல் தமது பதினாறாவது வயதிலே சென்னை தமிழிசைச் சங்கத்தில் "இசைமணி" என்ற பட்டத்தைப் பெற்ற போது கோவிந்தராஜனுடன் சீர்காழி ஒட்டிக்கொண்டதில் எவ்வித ஆச்சரியமுமில்லை.

கோவிந்தராஜன் 19-01-1933 அன்று நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழியிலே சிவசிதம்பரம் - அகவையம்பாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். தமது ஆரம்பக் கல்வியை சீர்காழி வாணிவிலாஸ் பாடசாலையில் கற்ற கோவிந்தராஜனுக்கு கல்வியில் பெரிதாக நாட்டமிருக்கவில்லை; மாறாக இசையில் பெரு விருப்பமிருந்தது.

கடுமையான பயிற்சி பெற்று தமது பதினாறாவது வயதில் சென்னை தமிழிசைச் சங்கத்தில் "இசைமணி" பட்டம் பெற்றார். தொடர்ந்து அடுத்த ஆண்டு 1950 இல் கர்நாடக இசைக் கல்லூரியில் "சங்கீத வித்வான்" பட்டம் பெற்றார்.

கணீரென்ற வெண்கலக் குரல் கொண்ட இந்த இசைமணி இளமைப் பருவத்தில் தியாகராஜ பாகவதரின் "வதனமே

சந்திரபிம்பமோ, "தியானமே எனது" பாடல்களையும், பி.யூ. சின்னப்பா பாடிய "செந்தாமரை முகமே" பாடலையும், எஸ்.ஜி. கிட்டப்பா இசைத்த "கோடையிலே இளைப்பாறி" பாடலையும் விரும்பிப் பாடுவார்; அனைவரும் இரசிப்பார்கள்.

அன்னாருக்கு தேவி நாடக சபா, பாய்ஸ் கம்பெனி போன்ற நிறுவனங்களில் நடிகராகப் பணியாற்றிய அனுபவமும் உண்டு.

முதன் முதலில் ஜெமினி நிறுவனம் தயாரித்த பிரமாண்டமான திரைப்படமான "ஔவையாரில்" ஆத்திசூடியைப் பாடியிருந்தாலும் அப்படத்தில் கோவிந்தராஜனின் பெயர் வெளியிடப்படாததால், 1953 ம் ஆண்டு டி.ஆர். ராமச்சந்திரன் தயாரித்த "பொன்வயல்" படத்தில் பாடிய பாடலே அவரது முதல் பாடல் எனப் பதிவாகியது. தொடர்ந்து ஏறுமுகம்தான். சீர்காழியாரின் இசைமழை அடைமழையாகப் பொழிந்து தள்ளியது; பாராட்டும் பெற்றது!

அன்றைய காலகட்டத்தில் முன்னணி கதாநாயகர்களாகத் திகழ்ந்த புரட்சி நடிகர் எம்.ஜி. ராமச்சந்திரனுக்கும், நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கும் பல படங்களில் பின்னணி பாடிப் புகழ் பெற்றார். குறிப்பாக ராஜராஜன், புதுமைப்பித்தன், சக்கரவர்த்தி திருமகள் போன்ற படங்களில் எம்.ஜி. ஆருக்கான அனைத்துப் பாடல்களையும் சீர்காழியாரே பாடியிருந்தார்.

ஒரு காலகட்டத்தில் கோவிந்தராஜன் தான் சினிமாவில் நகைச்சுவைப் பாடல்கள் பாட மிகவும் ஏற்றவர் என்ற நிலையிருந்தது. உதாரணத்திற்கு,

| | | |
|---|---|---|
| "ஆசைக்கிளியே கோபமா?" | - படம் | : சபாஷ்மீனா |
| "பட்டணந்தான் போகலாமடி..." | - படம் | : எங்க வீட்டு மகாலட்சுமி |
| "மாமியாருக்கு ஒரு சேதி" | - படம் | : பனித்திரை |
| "காதலிக்க நேரமில்லை..." | - படம் | : காதலிக்க நேரமில்லை |

சீர்காழி கோவிந்தராஜன் "தற்பெருமை" பார்க்காமல் பிற ஆண் பாடகர்களுடன் இணைந்து பாடிய பாடல்களும் பிரபல்யமடைந்தன.

இரசிகர்களின் பலத்த வரவேற்பையும் பெற்றன. உதாரணத்திற்கு,

டி.எம். சௌந்தரராஜனுடன் இணைந்து பாடிய கண்ணன் வந்தான் - படம் - ராமு, "இரவு நடக்கின்றது" பாடல்களையும், டி.எம்.எஸ்., பி.பி. ஸ்ரீனிவாஸ் இருவருடனும் இணைந்து பாடிய குழந்தைக்காக படத்து "தேவன் வந்தான்", கர்ணன் படத்து "ஆயிரம் கைகள் நீட்டி" பாடல்களையும், திருச்சி லோகநாதனுடன் சேர்ந்து பாடிய கப்பலோட்டிய தமிழன் படத்து "வெள்ளிப் பனிமலையின் மீது" பாடலையும் கூறலாம்.

சீர்காழி கோவிந்தராஜனின் மனைவி பெயர் சுலோசனா அம்மாள். ஆஸ்திக்கொரு ஆண்; ஆசைக்கு ஒரு பெண் என்பது போல் அவருக்கு டாக்டர் சிவசிதம்பரம் மகனாகவும், டாக்டர் ஞானவல்லி மகளாகவும் உள்ளார்கள். சீர்காழியார் மகன் சிவசிதம்பரத்துடன் இணைந்து இசை நிகழ்ச்சிகள் நடாத்தி உள்ளார் டாக்டர் சிவசிதம்பரம். அண்மையில் சிகாகோவில் நடைபெற்ற பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பக்கவாத்தியக் கலைஞர்களுடன் இசைக் கச்சேரி ஒன்றைச் செய்தமை இங்கு கவனத்திற்குரியது.

திரை உலகில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களைப் பாடிய இசைமணி கோவிந்தராஜன் நிறைய பக்திப் பாடல்களையும் பாடியுள்ளார். அமரர் பாடிய பக்திப் பாடல்கள் இசைத் தட்டுகளாகவும், கேசட்டுகளாகவும் வெளி வந்துள்ளன. மேலும் தமிழில் மட்டுமன்றி மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் அருமையாகப் பாடியுள்ளார் இந்த இசைமேதை.

சென்னை தமிழிசைக் கல்லூரியின் கௌரவ முதல்வராக இருந்த இந்த "கம்பீர கான மணி" அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் இசைத்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். மேலும் இலங்கை, பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி உட்பட பல வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்து இசைக் கச்சேரிகள் நடாத்தி மக்களை மகிழ்வித்துள்ளார்.

பிரபல இயக்குனர் ஏ.பி. நாகராஜன் தயாரித்த "கந்தன் கருணை", "திருமலை தென்குமரி", "அகத்தியர்", "வா ராஜா வா" உட்பட பன்னிரெண்டு திரைப் படங்களிலும் நடித்து சாதனை புரிந்தவர் இந்த இசைமணி.

அமரருக்கு மிகவும் பிடித்த இராகங்கள் கல்யாணி, லதாங்கி, சங்கராபரணம் மொத்தமாக ஐம்பத்தைந்து ஆண்டுகள் மாத்திரமே வாழ்ந்த இந்த மேதை வாழுங் காலத்திலே பெற்ற விருதுகள் பல. அவற்றுள் சிலவற்றை இங்கு பார்ப்பது சாலப் பொருத்தமானதாகும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 1949ம் ஆண்டு | - "இசைமணி" | - சென்னை தமிழ்ச்சங்கம் |
| 2. | 1950ம் ஆண்டு | - "சங்கீத வித்துவான்" | - கர்நாடக இசைக்கல்லூரி |
| 3. | 1983ம் ஆண்டு | - "டாக்டர்" | - சென்னை பல்கலைக்கழகம் |
| 4. | 1983ம் ஆண்டு | - "பத்மஸ்ரீ" | - இந்திய மத்திய அரசு |
| 5. | 1984ம் ஆண்டு | - "கலைமாமணி" | - தமிழக மாநில அரசு |
| 6. | 1985ம் ஆண்டு | - "கம்பீர கான மணி" | - காஞ்சி காமகோடி பீடம் |

23-03-1988ல் இறைபதமடைந்த சீர்காழியார் "திருமலை தென்குமரி" படத்தில் பாடிய திருப்பதி மலை வாழும் பாடல், "அகத்தியர்" படத்தில் பாடிய நடந்தாய் வாழி காவேரி பாடல், "கலங்கரை விளக்கம்" படத்தில் பாடிய "சங்கே முழங்கு" பாடல், "தை பிறந்தால் வழி பிறக்கும் படத்தில் பாடிய "அமுதும் தேனும் எதற்கு" பாடல் ஆகியவை இன்றும் எங்கும், எல்லோராலும் முணு முணுக்கப்படுகின்றன. இரசிக்கப்படுகின்றன என்பது நிதர்சனமான உண்மை!

**வாழ்க சீர்காழியார் புகழ்!**

**இணுவையூர் கலாபூஷணம்**
**ஆ. இரகுபதி பால ஸ்ரீதரன்**

# வாழ்க்கைத் தத்துவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | அன்பில் | - | நெகிழ்வு வேண்டும். |
| 2. | அறிவில் | - | தெளிவு வேண்டும். |
| 3. | ஆக்கத்தில் | - | ஊக்கம் வேண்டும். |
| 4. | வாழ்வில் | - | எளிமை வேண்டும். |
| 5. | உண்மையில் | - | உயிர்ப்பு வேண்டும். |
| 6. | உழைப்பில் | - | ஓய்வின்மை வேண்டும். |
| 7. | கொள்கையில் | - | உறுதி வேண்டும். |
| 8. | இயற்கையில் | - | ஈடுபாடு வேண்டும். |
| 9. | துன்பத்தில் | - | துணைநிலை வேண்டும். |
| 10. | புலமையில் | - | ஆழம் வேண்டும். |
| 11. | ஆராய்ச்சியில் | - | நடுநிலை வேண்டும். |
| 12. | பதவியில் | - | பகட்டின்மை வேண்டும். |
| 13. | புரட்சியில் | - | முதன்மை வேண்டும். |
| 14. | பண்பில் | - | சால்பு வேண்டும். |
| 15. | அறத்தில் | - | நம்பிக்கை வேண்டும். |
| 16. | புகழில் | - | மயங்காத நிலை வேண்டும். |
| 17. | செல்வத்தில் | - | செருக்கின்மை வேண்டும். |
| 18. | விளம்பரத்தில் | - | விருப்பமின்மை வேண்டும். |
| 19. | தமிழில் | - | தமிழ் பற்று வேண்டும். |
| 20. | கடமை | - | மறவாது இருக்க வேண்டும். |
| 21. | மன்னிப்பு | - | மன்னிக்கும் தன்மை வேண்டும். |
| 22. | செய்வன | - | திருந்தச் செய்ய வேண்டும். |
| 23. | காலத்தை | - | பொன்னாகக் கருத வேண்டும். |
| 24. | தீங்கு | - | மனதால் கூட நினைக்கக் கூடாதது. |
| 25. | பக்தி | - | உள்ளன்போடு இருக்க வேண்டும். |
| 26. | பொறாமை | - | ஒழிய வேண்டும். |
| 27. | பெரியோர் | - | கீழ்படிவு வேண்டும். |

28. தாய், தந்தை - போற்ற வேண்டும்.
29. வாசிப்பு - சிறந்த நூல்களை வாசிக்க வேண்டும்.
30. சிந்தனை - நல்லவையாக இருக்க வேண்டும்.
31. துயில் - அதிகாலையில் எழும்ப வேண்டும்.
32. கல்வி - கல்விக்காக உழைக்க வேண்டும்.
33. உணவு - இயற்கை உணவாக வேண்டும்.
34. கலை - ஆர்வம் வேண்டும்.
35. ஆணவம் - அகற்றப்பட வேண்டும்.
36. எனது - எல்லாம் கடவுளாக வேண்டும்.
37. பரிவில் - உயிர்த்துடிப்பு வேண்டும்.
38. இரக்கம் - உயிர்களிடத்து இருக்க வேண்டும்.
39. நட்பு - கலப்படம் அற்றதாக வேண்டும்.
40. பொய் - சொல்லாமை வேண்டும்.
41. ஒழுக்கம் - உயிரிலும் ஓம்பப்பட வேண்டும்.
42. வார்த்தை - பிறர் மனதை காயப்படுத்தாமல் இருக்க வேண்டும்.
43. நேர்மை - கடைசி வரையும் இருக்க வேண்டும்.
44. ஒற்றுமை - ஒன்று படல் வேண்டும்.
45. பிரிவு - இல்லாமை வேண்டும்.
46. களவு - இல்லாமை வேண்டும்.
47. உப்பு - இட்டவரை உள்ளவும் நினைக்க வேண்டும்.
48. வாழ்வு - ஆரோக்கியமாக இருக்க வேண்டும்.
49. கெடுதல் - அடுத்தவரை கெடுத்து வாழாமை வேண்டும்.
50. கொடை - தாராள மனம் வேண்டும்.
51. நீதி - தர்மமாக இருக்க வேண்டும்.
52. உள்ளம் - உயர்ந்ததாக வேண்டும்.
53. போட்டி - விட்டுக் கொடுத்தல் வேண்டும்.

54. முகம் - புன்னகை பூத்த பொலிவோடு இருக்க வேண்டும்.

55. கவலை - எல்லாம் அவன் செயல் என்று இருக்க வேண்டும்.

56. கோபம் - இல்லாமை வேண்டும்.

57. உதவி - பலனை எதிர்பார்க்காது செய்தல் வேண்டும்.

58. சூழல் - சுத்தமாக இருக்க வேண்டும்.

59. பாராபட்சம் - மாணவர்களிடையே, ஆசிரியர்கள் பார்க்காது இருக்க வேண்டும்.

60. கை - நல்ல செயல்களை செய்ய வேண்டும்.

61. கண் - நல்லவற்றை பார்க்க வேண்டும்.

62. வாய் - தீமை பேசாது இருக்க வேண்டும்.

63. ஆசை - தவிர்க்க வேண்டும்.

64. காது - நல்லவற்றை கேட்க வேண்டும்.

65. வேதம் - ஓத வேண்டும்.

66. கால் - நல்ல பாதையில் செல்ல வேண்டும்.

67. சீதனம் - இல்லாமை வேண்டும்.

68. இல்லம் - சிறக்க வேண்டும்.

69. அழகு - பெருமை கொள்ளாது இருக்க வேண்டும்.

70. தொண்டு - தன்னலம் கருதாத தொண்டு வேண்டும்.

71. குறை - காண்பது தவிர்க்க வேண்டும்.

72. பேச்சு - அடுத்தவர்களைப் பற்றி அவதூறு பேசாது இருக்க வேண்டும்.

73. மனிதன் - மனிதனை மனிதன் மதிக்க வேண்டும்.

74. பேதம் - சாதி, மதம், உயர்வு, தாழ்வு பார்க்காது இருக்க வேண்டும்.

75. கடை - நியாயமான விலையில் விற்க வேண்டும்.

76. அழிவு - தேடாது இருக்க வேண்டும்.

77. கேள்வி - நல்லவற்றை கேட்க வேண்டும்.
78. ஏமாற்றுதல் - இல்லாமை வேண்டும்.
79. தண்ணீர் - சிக்கனம் வேண்டும்.
80. குருக்கள் - பேதமின்றி பூசை செய்ய வேண்டும்.
81. ஆண் - ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.
82. பெண் - முறை தவறி வாழக் கூடாது.
83. ஆசிரியர் - தன் பணியை தொழிலாக கருதாமல் சேவையாக கருத வேண்டும்.

*"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு*
*எல்லோர்க்கும் பெய்யுமாம் மழை"* என்பது போல்

*"தீயார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு*
*எல்லோர்க்கும் விழையும் தீனம்"*

எனவே

*"நன்மை செய்யாவிடினும்*
*தீமையாவது செய்யாதிருந்து"* எல்லோரையும் காப்பாற்றுவோம்.

*"எல்லோரும் எல்லாம் பெற வேண்டும்*
*இங்கு இல்லாமை என்றொரு நிலை வேண்டும்"*

என்றும் உள்ளன்போடு கடவுளை பிரார்த்தனை செய்வோம்.

ஆக்கம் :

**செல்வி. வ. கலா**

# வைரவக் கடவுளின் சிறப்புக்கள்

சைவப்பெருமக்கள்தமதுமுழுமுதற்கடவுளாகசிவபெருமானையே வழிபடுகின்றனர். சிவபெருமானுக்கு 64 திருமேனிகள் (மூர்த்தங்கள்) உள்ளன. அவற்றுள் ஒருவராக பைரவர் குறிப்பிடப்படுகின்றார். தாரகாசுரன் என்ற அசுரன் இறைவனை வேண்டி தவம் செய்து தமக்கு இறவா வரம் வேண்டும் என்று சிவனிடம் இறைஞ்சினான். உடலுக்கு இறப்பு நிச்சயம் உண்டு என்று கூறிய சிவன், அவனை நோக்கி, ஏதோ ஒரு பொருளினால் தனக்கு இறப்பை வேண்டும்படி அவனிடம் கூறினார்.

தாரகாசுரனும் அகங்காரத்துடன் ஒரு பெண்ணைத் தவிர, யாரும் தன்னை அழிக்கக் கூடாது என்ற வரத்தினை இறைவனிடமிருந்து பெற்றான். தேவர்களுக்கு பல கொடுமைகளைச் செய்த அவனை அழிக்கும்படி தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். அவனை அழிக்கும் காலமும் வந்தது. பார்வதி தேவியார் சிவன் விழுங்கிய ஆலகால விஷத்தினால் கறை படிந்த ஒரு சுடரை உருவாக்கினாள். அது ஒரு பெண்ணாக வடிவெடுத்தது. காலம் என்ற விஷம் கலந்த அந்தப் பெண்ணிற்கு ”காளி” எனப் பெயர் சூட்டினாள் பார்வதி தேவியார்.

காளிதேவி கடும் சினத்துடன் தாருகாசுரன் இருக்கும் திசை நோக்கித் திரும்பினாள். அந்தக் கோபம் கனலாக வடிவெடுத்தது. அவனைச் சுட்டெரித்த காளிதேவி அந்தக் கனவை ஒரு குழந்தையாக மாற்றி அதற்குப் பாலூட்டினாள். அதன் பின் சிவபெருமான் காளியையும் அந்தக் குழந்தையையும் தன் அருள் நோக்கினால் எட்டுக் குழந்தைகளாக உருவாக்கினார். அதற்கு சிவபெருமான் ”பைரவர்” எனப் பெயர் சூட்டினார். இவர் சிவனுக்குச் சமமாகவே கருதப்படுவார்.

ஆலயங்களில் காவல் தெய்வமாக வழிபடப்படும் இவர் பயத்தைப்

போக்குபவராகவும் பொருள்படுவர். வளர்பிறை தேய்பிறையில் வரும் அஷ்டமி பைரவருக்கு உகந்த நாளாகக் கருதப்படுகின்றது. முத்தொழில்களைச் செய்து பல இலட்சம் உயிர்களைக் காப்பாற்றுவதால் அவருக்கு திரி சூலம் அதிகார ஆயுதமாக அளிக்கப்பட்டது. படைத்தலை அவளது உடுக்கையும், காத்தலை கபாலமும், அழித்தலை விபூதியும் குறிக்கும்.

ஆலயங்களில் முதலில் செய்யும் காலைப் பூஜையும் இரவில் நடக்கும் நிறைவுப் பூஜையும் பைரவருக்கே உரியது. மகோற்சவத்தின் ஆரம்பத்திலும் நிறைவிலும் பைரவருக்கு சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. சித்திரை, ஐப்பசி மாதங்களில் வரும் பரணி நட்சத்திரம் அவருக்கு உரிய விரதமாகும்.

சனி பகவான் தேவர் அசுர மானிடர்கள் என்ற பாரபட்சமின்றி தமது கடமைகளைச் செய்து முடிப்பாராம். சனீஸ்வரன் தமது தமையனாரான எமன், பைரவனிடமிருந்து அதீத சக்திக்காக வரம் பெற்றதைக் கண்டதும், தானும் பைரவரை நோக்கி கடும் தவம் செய்யத் தொடங்கினார். அவரது தவ வலிமையினால் பைரவர் அவர் முன் தோன்றி மும்மூர்த்திகள் உட்பட அனைவரையும் கால வர்த்தமான நிர்ணயப்படி நல்லது, தீயது செய்யும் சக்தியை அருளினார். அதனால் சனீஸ்வரனின் சஞ்சாரத்தினால் எவர் ஒருவருக்கு கஷ்டம் வந்தாலும் அவர்கள் பைரவரை வழிபட்டுச் சரணடைந்தால் அவர்களுக்கு சனீஸ்வரன் நன்மைகளைச் செய்வார் என்பது நம்பிக்கை.

அஷ்ட பைரவர்கள் :-

1. அசிதாங்க பைரவர்
2. குரு பைரவர்
3. சண்ட பைரவர்
4. குரோதன பைரவர்
5. உன்மத்த பைரவர்
6. கபால பைரவர்
7. பீஷண பைரவர்
8. சம்ஹார பைரவர் ஆவர்.

அஷ்ட பைரவர்கள் சப்த கன்னிகளை அதி தேவதையாகக் கொண்டிருக்கின்றனர். அஷ்ட பைரவர்களை வணங்கி நவக்கிரகங்களின் தோஷங்களை நீக்கலாம். இதற்கான இந்துக் கோவில்கள் காசி மாநகரில் உள்ளன.

1. அசிதாங்க பைரவர் அன்னப் பறவையை வாகனமாகக் கொண்டுள்ளார். அதி தேவதை பிராம்ஹி ஆவார். குருவின் (வியாழனின்) தோஷமும் நீங்க விருத்த காலர் கோவிலிலுள்ள இவரை வணங்கி அருள் பெறலாம்.

2. குரு பைரவர் சிவன் போலவே ரிஷபத்தை வாகனமாகக் கொண்டுள்ளார். இவரின் சக்தி அதி தேவதை மகேஸ்வரி ஆவார். சுக்கிர தோஷம் (வெள்ளி) நீங்க காமாட்சி கோவிலுள்ள இவரை வணங்கி அருள் பெறவும்.

3. சண்ட பைரவர் மயிலை வாகனமாகக் கொண்டுள்ளார். இவரின் சக்தி அதி தேவதை கவுமாரி ஆவார். செவ்வாய் தோஷம் நீங்க துர்க்கை கோவிலில் இவரை வணங்கி அருள் பெறலாம்.

4. குரோதன பைரவரின் வாகனம் கருடன். இவரின் சக்தி அதி தேவதையாக வைஷ்ணவி விளங்குகிறார். சனி தோஷம் நீங்க காமாட்சி கோவிலுள்ள இவரை வணங்கி அருள் பெறலாம்.

5. உன்மத்த பைரவர், இவரின் வாகனம் குதிரை. இவரின் சகதி அதி தேவதையாக வராகி உள்ளார். புதன் தோஷம் நீங்க பிரசண்டி கோவிலில் உள்ள இவரை வணங்கி அருள் பெறலாம்.

6. கபால பைரவர், இவரின் வாகனம் யானை. அவரின் சக்தியாக அதி தேவதையான இந்திராணி விளங்குகிறார். சந்திர தோஷம் நீங்க, லாட் பசார் கோவிலுள்ள இவரை வணங்கி அருள் பெறலாம்.

7. பீஷண பைரவரின் வாகனம் சிங்கம். இவரின் சக்தியாக சாமுண்டி விளங்குகிறார். கேது தோஷம் நீங்க பூத பைரவர் கோவிலில் இவரைத் தரிசனம் செய்யலாம்.

8. சம்ஹார பைரவர் இவரின் வாகனம் நாய். இவரின் சக்தியாக சண்டிகை தேவி விளங்குகிறார். திரி லோசனா சங்கம் கோவிலில் இவரை வணங்கி அருள் பெற முடியும்.

சகல வல்லமையும் பெற்ற பைரவப் பெருமானை வழிபட்டு பயன் பெறுவோம்.

*பரமனை மதித்திடா, பங்கயாசனன்*
*ஒரு தலை கிள்ளியே ஒழிந்த வானவன்*
*குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்*
*புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்*

ஆக்கம் :
**கதிரவேலு மகாதேவா**

# தேன் குடம்

விஞ்ஞானத்தால் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த இயந்திர உலகத்தில் மனிதனும் வெறும் இயந்திரமாகிவிட்டான். வாழ்க்கையை செவ்வனே கொண்டு செல்ல முடியாமல் நாயாய் அலைகிறான். மனிதனுக்கு உணவு எவ்வளவு முக்கியமானதோ அதோடு செவிக்கும் உணவும் வேண்டும். செவிக்கு தொடராக சுவை மிக்க கதைகள், தித்திக்கின்ற இலக்கியங்கள் கிடைக்குமானால் பசியும் பறந்து விடும் என்று கூறுவார்கள். அதற்காக சாப்பிடாமல், நீர் அருந்தாமல், இருக்க முடியாது. முன்னோர்கள் தொடர்ந்து உரைகளையும், புராணப் படிப்புக்களையும் இடைவிடாது கேட்டு நோய் நொடி அற்று வாழந்துள்ளனர் என்பது வரலாறு.

வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை, ஆறுமுக நாவலருக்கு மருமகனும், மாணாக்கரும் ஆவார். கந்தபுராண திருமணப்படலம், திருச்சிற்றம்பல கோவையார் உரை, திருக்குறள் பரிமேலழகர் உரை, நன்னூல் விருத்தியுரை ஆகியவற்றை நாவலரிடம் துறைபோகக் கற்றவர் மகாவித்துவ சிரோமணி "பிரம்மஸ்ரீ சி. கணேசையர்", கோப்பாய் "சபாபதி நாவலர்", உரை ஆசிரியர் "ம.க. வேற்பிள்ளை" ஆகியோர் பொன்னம்பலப்பிள்ளையின் மாணாக்கர். நடமாடும் பல்கலைக்கழகம், பல்கலைகழகத்தைவிட மேலானவர். தெருக்கள், திண்ணைகள், குளக்கட்டுகள், மர நிழல்கள், கோவில் மண்டபங்கள் முதலியன இவர் பாடம் சொல்லும் இடங்களாக அமைந்தன. கிராமங்கள் தோறும் சுற்றித் திரியும் பயன்மிக்க ஒரு விருட்சம் என்றும் இவரைச் சொல்லலாம். அழகு, நவரசங்கள், சொட்டப் பாட்டுகளுக்கு உரையாற்ற பிறந்தவர் என்று இவரைக் குறிப்பிடுவார்கள். தனிக்கற்கண்டில் செய்த மோதகம் போல இவரது இலக்கிய இரசனை இருக்கும்.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர கோவிலின் வித்தியா மண்டபம் நாவலர் பிரசங்கம் செய்யும் இடமாக அன்று இருந்தது. பின்னர் தொடர்ந்து வித்துவ சிரோமணி பொன்னம்பலப்பிள்ளை,

புராணங்களுக்கு உரை சொல்லும் இடமாக அது மாறியது. மகா பிரபு வைத்திலிங்கம் செட்டியார் உருவாக்கிய யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலில் வசந்த மண்டபத்தில், தேனொழுக புராணத்திற்கும், கம்பராமாயணத்திற்கும் கனிகளாக பயன்களை விரிப்பார் இவர். மண்டபம் நிறைந்திருக்கும். ஊசி விழுந்தால் கேட்கும். திருமாலின் திருக்கரத்தில் இருக்கும் சங்குக்குப் "பஞ்ச சந்நியம்" என்று பெயர் உண்டு. அதனை ஆயிரம் வலம்புரிகளை அளவிலாத இடம்புரிகள் சூழ்ந்திருக்கும் என்று கூறுவர். அதே போல அவர் ஒரு "தேன் குடம்" அதை இரசிப்பவர்கள் எறும்புக் கூட்டங்கள் போல சதா அவரைச் சூழ்ந்து கொண்டிருப்பார்கள்.

சீவக சிந்தாமணிக்கும் சிறப்பாக உரை சொல்லக் கூடியவர் இவர். சீவக சிந்தாமணியை முதன் முதலாகப் பதிப்பித்த உ.வே. சாமிநாதையர், பொன்னம்பலப்பிள்ளைக்குப் பிரதியை அனுப்பி பாற்கடலின் ஆழம் மந்திர மலைக்குத் தெரியுமே அன்றி வேறு எந்த மலைக்கும் தெரியாது, அதேபோல சீவக சிந்தாமணியின் ஆழம் உங்களுக்குத்தான் தெரியும் என்றும் கூறி அதனை அங்கீகரிக்குமாறு வேண்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொன்னம்பலப்பிள்ளையின் சங்க நூல் பயிற்சி பற்றித் திருகோணமலை கனக சுந்தரம் பிள்ளை, நற்றிணை உரை, முகவுரையில் எழுதியிருக்கிறார். ம.க. வேற்பிள்ளை புலவர் அவர்கள் பொன்னம்பலப்பிள்ளையின் தலை சிறந்த மாணாக்கர் ஆவர்.

இவர் திருவாதவூரடிகள் புராணத்திற்கு சிறந்ததொரு விளக்க உரை எழுதி, பொன்னம்பலம் பிள்ளையின் முன்னிலையில் அரங்கேற்றி, பொன்னம்பலம் பிள்ளையால் உரை ஆசிரியர் என்று பட்டம் சூட்டப் பெற்றவர்.

யாழ்ப்பாணம் நல்லூர், நாயன்மார்க்கட்டு மகாவித்துவான் அரசகேசரி, தமிழிலே "இரகுவம்சம்" என்ற காவியத்தை இயற்றி நல்லூரில் இருந்த தமிழ்ச் சங்கத்தில் பரராசசேகரன் முன்னிலையில் அரங்கேற்றினார். இக் காவியம் வடமொழியில் காளிதாசன் மகாகவி இயற்றிய இரகுவம்சத்தின் மொழி பெயர்ப்பாகும். இந்த இரகுவம்சத்தை அச்சில் பதிப்பித்து வெளியிட்டவர் வித்துவ சிரோமணி ந. ச. பொன்னம்பலம் பிள்ளை ஆவர்.

இவர் ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கி ஈழத்திரு நாட்டில் தலை சிறந்த அறிஞராக விளங்கியவர். அத்துடன் அவர் ஒரு கலாவினோதர். கலைஞர்கள் அவர் முன்னிலையில் தம் திறமைகளைக் காட்டி அவரிடம் பரிசில்களையும், பட்டங்களையும் பெறுவதை பெரும் பாக்கியமாகக் கருதினார்கள். அவரது மாணவர்களினால் "பொன்மழை பெய்யும் மேகம்" என்று வர்ணிக்கப்படும் வித்துவ சிரோமணி பொன்னம்பலம்பிள்ளை தமிழுக்கு செய்த பணியை எளிதில் நாம் மறந்து விட முடியாது.

ஆக்கம் :

**ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி**

# THREE ESSENTIAL THINGS "GOD" "WORLD" "DEATH"

From morning till night you must think of the three (3) essential things namely do not forget "God" do not believe the "World" and do not be afraid of "Death", these three things are essencial in your life. You must forget any harm done to you by others. So also forget any good you may do to others. If you keep on thinking in your mind the harm done to you by others. you will in return attempt to harm them. Your harm to them in return is a sin you should not under take to commit such a sin.

By forgeting the good that you may have done to others. You will not be expecting them.

Your will have to take birth again. You should strive not to participate in transaction connected. with the cycle of birth and death. Unfortunately several people take spritual path as if it is a path of bussiness.

I am hoping that you will recognise truth and make your lives Truthfull and Purposefull.

SAI BABA

# பசுமை நிறைந்த நினைவுகள்

இன்று நான் இலங்கையில் முக்கியமான ஒரு திணைக்களமான அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் தலைவியாக கடமையாற்றி வருகின்றேன். என் வாழ்க்கையில் நான் இற்றை வரை அடைந்த வளர்ச்சிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி முக்கிய பங்காற்றியுள்ளது என்றால் அது மிகையாகாது.

எனது எட்டாவது வயதிலேயே நான் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் மாணவியாகச் சேர்ந்தேன். அப்போது வகுப்பு ஆசிரியையாக திருமதி C. சண்முகம் அவர்கள் இருந்தார்கள். அவரின் அன்பும் கவனிப்பும் தான், என்னை அந்தப் பாடசாலையில் தொடர்ந்து இருக்க வைத்தது. திருமதி நடராசா அவர்கள் ஆங்கில ஆசிரியையாகவும் திருமதி லீலா பாலசிங்கம் அவர்கள் விளையாட்டு ஆசிரியையாகவும் இருந்தனர்.

உண்மையைக் கூறப்போனால் நான் சிறுவயதில் சுமாராகத் தான் படிப்பேன். எனினும் எட்டு வயது பிள்ளையின் பிஞ்சுக் கைகளைப் பிடித்து, உன்னாலும் முடியும் எனக் கூறி, அச் சிறுமியின் அறிவையும், ஆற்றலையும் வளர்த்ததோடு, வாழ்வில் வெற்றி காண்பதற்கான தன்னம்பிக்கையையும் ஊட்டி அச் சிறுமி வாழ்வில் உயர வழிவகுத்த பெருமை எம் கல்லூரி அன்னையயே சாரும்.

என் 6 வது வகுப்பாசிரியையாக இருந்த செல்வி சிவக்கொழுந்து (திருமதி விக்கினேஸ்வரன்) கண்டிப்பாக இருப்பார். மாணவிகள் நல் ஒழுக்கங்களை சரியாக பின்பற்ற வேண்டும் என்பதில் திடமாக இருப்பார்.

எனினும் அவர் கண்டிப்பிலும் கனிவு கலந்து இருக்கும். எனதும், என் தோழிகளினதும் முன்னேற்றத்திற்காக பல அறிவுரைகளை

வழங்கியுள்ளார். அத்துடன் வீட்டு வேலை, வாரப்பரீட்சை, மாதப் பரீட்சை, தவணைப் பரீட்சை என கல்வியின் முன்னேற்றத்தை கவனித்து அறிவுரைகளைக் கூறுவார். எனக்கு கணக்கு ஆசிரியையாக இருந்த செல்வி காதர், விஞ்ஞான ஆசிரியைகளாக இருந்த திருமதி துரைசிங்கம் மற்றும் திருமதி நாகராஜா அவர்களும் மாணவிகளின் முன்னேற்றத்திற்கு பாரிய பங்காற்றியுள்ளனர்.

எனது சிரேஷ்ட வகுப்புக்களில் திருமதி ஞானசம்பந்தன் என்ற கணித ஆசிரியையிடம் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் ஒரு நாள் என்னை அழைத்து, நான் கணித பரீட்சையில் விட்ட கவனயீனப் பிழைகளைச் சுட்டிக் காட்டி, இவற்றை நீ திருத்தினால் உனது புள்ளிகள் நூற்றுக்கு நூறு ஆகும் என்று அக்கறையுடன் கூறினார். அதன் பின்னர் எனக்குக் கணிதப் பாடத்தில் ஆர்வம் வந்து, கூடிய அக்கறையுடனும், கவனத்துடனும் கற்று கூடிய புள்ளிகளை பெற்றதுண்டு.

எமது ஆங்கில ஆசிரியை செல்வி குழந்தை வேல் அவர்களும் மிகவும் அக்கறையாகப் பாடம் சொல்லிக் கொடுப்பார்.

திருமதி தம்பு எமக்குத் தமிழும் சைவமும் படிப்பித்த ஆசிரியை. அவர் வகுப்பு எடுத்தால் மீண்டும் வீட்டில் படிக்கத் தேவையில்லை. மனதில் பதியும் படி பாடம் கற்பிப்பார் அவர்.

திருமதி சண்முக வடிவேல் அவர்கள், எங்கள் சமூகவியல் ஆசிரியை. அவர் கதையாகப் பாடம் படிப்பிப்பார். இலகுவாக மனதில் படியும். இவ்வாறு எமக்கு வழிகாட்டிய ஆசிரியச் செம்மல்களை என்றும் மறக்க முடியாது.

நான் படிப்பு, பாட்டு, விளையாட்டு என எல்லாவற்றிலும் பங்கு பற்றுவேன். க.பொ.த சாதாரணப் பரீட்சையில் பாடசாலைகளுக்கு இடையில் மாணவிகளின் திறமையை கல்வித் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்ட போது இதில் நான் நல்லூர் வட்டாரத்தில் முதன் மாணவியாகத் தெரிவு செய்யப்பட்டேன்.

க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானத் துறையில் படித்தேன். அக் காலகட்டத்தில் மாணவிகளது ஒழுக்கம், கவனிப்பதற்குப் பொறுப்பாக இருந்தவர். செல்வி. இரட்னம். இவரை எளிதில் மறக்க முடியாது. மிகவும் கண்டிப்பானவர். ஆனால் அக்கறையானவர். இவர் தான் பௌதீக ஆசிரியையாக இருந்தவர். அர்ப்பணிப்புடன் பாடம் நடாத்துவார். இவரும் அடிக்கடி பரீட்சைகள் வைத்து மாணவிகளின் முன்னேற்றத்தில் அக்கறை எடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரசாயன ஆசிரியையான திருமதி சிவானந்த நாயகம், தாவரவியல் ஆசிரியரான திருமதி இ. ராமநாதன், விலங்கியல் ஆசிரியர்களான திருமதி பரராஜசிங்கம், திருமதி பரமநாதன் அவர்களும் எமது பாடங்களில் விசேட கவனம் செலுத்தி எமது முன்னேற்றங்களில் அக்கறை காட்டினார்கள்.

திருமதி நாகரட்னம் அவர்களிடம் எனக்கு படிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இவர் அப்போதைய காலகட்டத்தில் உப அதிபராக இருந்தவர். பாடசாலையின் ஆரம்ப காலத்தில் அதிபராக இருந்தவர் திருமதி ஆறுமுகம், பின்னர் செல்வி இராமநாதன் அவர்கள் அதிபரானார். அவரின் காலத்தில் பாடசாலை, கல்வி, விளையாட்டு, கலை எனப் பலத்துஜறகளிலும் வளர்ச்சி பெற்றுப் புகழடைந்தது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பெறுபேறுகளின் அடிப்படையில், நான் உயிரியல் விஞ்ஞானத்துறைக்கு 1983 ம் ஆண்டு யாழ் பல்கலைகழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டேன். அங்கு இரசாயனத்துறையை சிறப்பு பாடமாக எடுத்து அதில் 2 ம் வகுப்பில் உயர்தரத்தினில் தேர்ச்சி பெற்றேன். 1990 ம் ஆண்டு தற்போது வேலை பார்க்கும் திணைக்களத்திற்கு உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இற்றோடு முப்பது வருடங்களாக அத் திணைக்களத்தில் வேலை பார்க்கின்றேன்.

இரசாயனத் துறையில் நான் தேர்ச்சி பெறுவதற்கு எனது பெற்றோரும் காரணமாக இருந்திருக்கலாம். ஏனெனில் பெற்றோர் இருவரும் இரசாயன ஆசிரியர்கள். அத்துடன் எனது அன்னையார்

திருமதி தெய்வநாயகி முத்துக்குமார சுவாமியும் எம் பாடசாலையின் விஞ்ஞான, இரசாயன ஆசிரியை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கையில் வெற்றி காண கல்வியோடு ஒழுக்கமும் முக்கியம் என்பதை உணர்த்தியவர்கள் ஆசிரியர்கள் தான். இன்று அகில இலங்கையும் அறியும் வகையில் யான் இந்த உயரிய பதவியில் இருப்பதற்கு எனது பாடசாலை ஆசிரியர்களின் வழிகாட்டல்களும் காரணமாக இருந்தது என்றால் மிகையாகாது.

எனது பாடசாலை பல உயர்ந்த உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்களை இன்னும் உருவாக்கி மேலோங்க வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன்!

*சுபம்*

**குறிப்பு :** *ஆம் இவ் ஆசிரியரைப் பற்றியும் நான் கூறியாக வேண்டும். இவர் செல்வி கந்தையா. இவரிடம் எனக்க கல்வி கற்கும் பாக்கியம் கிடைக்கவில்லை. எனினும் நான் இரசாயனப் பகுப்பாய்வாளராக வந்ததை உதயன் பத்திரிகையில் பார்த்து என்னை வாழ்த்தினார். வாழ்த்தியதும் மட்டுமல்லாமல் அப் பத்திரிகை இரண்டை வாங்கி பாடசாலை ஆசிரியையாரான திருமதி சீவரட்னம் மூலம் எனக்கு இங்கு கொடுத்து அனுப்பி வைத்தார். இது எமது பாடசாலை ஆசிரியர்களின் அக்கறை.*

*"நான் இங்கு வசிக்கின்றேன். இவ்விடம் அழகாக இருக்க வேண்டும்"*

ஆக்கம் :

**கௌரி ரமணா**

# கொரோனா வைரஸ்
# COVID - 19

சீனாவில் பிறந்து ஊகானில் வளர்ந்து உலகம் முழுவதும் பரவி மனித உயிர்களை காவு கொள்வது கொரோனா என்னும் கொடிய நோய்.

கொரோனா வைரஸ் தீவிரமாகத் தொடங்கி ஊகான், அமெரிக்கா, இத்தாலி, ஸ்பெயின், இந்தியா, இலங்கை, ஜேர்மனி, பிரான்ஸ், ஈரான், ஈராக், டென்மார்க், இன்னும் எத்தனையோ நாடுகளில் பரவியது. இந்நோயால் இலட்சக்கணக்கில் மக்கள் உயிர் இழந்து கொண்டிருக்கிறார்கள். இன்னமும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை இந்த நோய்க்கு.

இந் நோய் இந்தியாவில் மிக மோசமாக உயிர்களைக் காவு கொள்கின்றது. கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவி வருவதை அடுத்து பொது மக்களிடையே அச்சமும் கவலையும் ஏற்பட்டுள்ளது. அனைத்து வயதினரையும் தொற்றும் தொடர்பிலான விழிப்புணர்வை பத்திரிகைகளிலும், சமூக ஊடகங்களிலும், தொலைக்காட்சி மூலமும் அறிந்து வருகிறார்கள்.

சிறுவர்கள், வயது வந்தவர்களை, மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கைகளை சுத்தம் செய்யவும் வாய், கண், மூக்கு முதலியவற்றை கைகளால் தொட வேண்டாம். மற்றவர்களுக்குக் கை கொடுக்க வேண்டாம் அவர்களைக் கட்டிப்பிடிக்க வேண்டாம். மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும், சவர்க்காரம் போட்டு கை கழுவுங்கள். வீட்டிற்குள்ளேயே முடங்கி இருங்கள். சுத்தமாக இருங்கள். வெளியில் செல்லாதீர்கள். முகக்கவசம் கட்டாயமாக அணிந்து செல்லுங்கள். இவ்வாறு சுகாதார அமைச்சு எமக்கு அறிவுறுத்தியுள்ளது.

உலகில் மக்கள் மிகவும் பீதியில் இருக்கிறார்கள். எச்சரிக்கையாக உள்ளார்கள். அப்படி இருந்தபோதும் வெளி நாடுகளில் இலட்சக்கணக்கில் மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் இத்தொற்றால் பல பிரபல நடிக நடிகையர், பாடகர், பாடகிகள், மற்றும் பிரபல அதிபர்கள், ஏழை எளியவர்கள், படித்தவர், பாமரர்கள் என்று பாராபட்சம் பாராது இந்த நோய் தொற்றால் இறந்து கொண்டிருக்கிறார்கள். உலக அழிவிற்கு இது ஒரு அறிகுறி என்று தான் சொல்ல வேண்டும்.

அக்கிரமம், அநியாயம் தலை தூக்கியுள்ளது. நாகரிகம் முன்னேற, முன்னேற அநியாயம் அதிகரித்துக் கொண்டு போகிறது. இப்போது கலியுகம் நடந்து கொண்டிருக்கின்றது. உலகம் அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்க, இதனால் ஐம்பூதங்களும் செய்வதறியாது அட்டகாசம் தொடங்கியுள்ளது. "நீர், நிலம், தீ, காற்று, ஆகாயம்" ஆகியவற்றால் உலக அழிவிற்கு அறிகுறி தென்படுகின்றது.

நாகரீகம் என்ற போர்வையில் உலகம் அழிந்து கொண்டு போகிறது. "கலியுகம்" நடக்கிறது. கடவுளும் இறங்கிவிட்டார் போலும் "என்னென்று சொல்வது, ஏதென்று சொல்வது சோதனை மேல் சோதனை போதுமடா சாமி இனி தாங்காது பூமி? "எப்போது முடியும்? எப்போது விடியும்? சிந்திப்போமா?"

ஆக்கம் :

**ஞானேஸ்வரி ஞானசேகரம்**

யாழ் இந்து மகளிர் கல்லூரி

பழைய மாணவ சங்கம் சங்க உறுப்பினர்

# எமது பிறப்பின் பெருமை

"ஆறு அறிவு கொண்டவராய்ப் பிறந்திடல் நாம் செய்த புண்ணியமே. மானிடராகப் பிறந்து, மக்களின் ஒருவராகத் திகழ்ந்து, சமூகத்தின் உறுப்பினராக உரிமை பெறுவது பாக்கியமே எனின் எம் இலட்சியம் என்ன? எம் பெருமை என்ன?" யாம் சிந்தித்தாக வேண்டும்.

*"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்*
*இறைவன் அடி சேராதார்"*

**(வள்ளுவர் வாக்கு)**

உயிர் நீங்கினாலும், உடல் அழியாது இருப்பது இல்லை. ஆனால் ஆன்மா என்றென்றும் நிலைக்கும். பணம், பதவி, பாராட்டு, எம்மை வழிநடத்துபவை அல்ல. நாம் தேடாமல், அவை நம்மை நாடி வரலாம். எனினும் குணம், பண்பு, உயர்ச்சி, தர்மநெறி ஆன்மீகம் தான் நம்மை உயரிய வழியில் கொண்டு செல்லும்.

உன்னைப் போல் பிறரை நேசி, உன்னிலும் தாழ்ந்தவனை, கஷ்டப்படுபவனைக் கண்கொண்டு, காண்பாய். எம் மதம், எம் தாய்வழி வந்த பெருமை. ஆனால் மற்ற மதங்களைப் பற்றி எதிராகப் பேசாதே. மதம். அறவழி நின்று, குருவின் வழியில் நன்மைகளைப் புரிவாய்.

யாதும் ஊரே! யாவரும் கேளிர்! சாதி, மத, இன, மொழி பேதம் காண்பது நல்லது அல்ல. ஓடும் உதிரம் சிவப்பு; ஒழுகும் கண்ணீர் உவர்ப்பு; கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை கௌதம புத்தர் ஆகியோரின் வாயிலாக நூலில் பகர்ந்துள்ளார்.

நன்மை செய்யின் நன்றே செய்யின் நன்மை விளையும். முற்பிறப்பின் கர்மவினை போக்க இப்பிறப்பில் தர்மம் காக்க.

மணிமேகலை கூறுவது பொய்யாகுமா?

ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும் அங்ஙனமாயின் மானிடராகப் பிறந்த நாம், பக்தி, அறம், அன்பு, ஆன்மீகம், அரவணைப்பு, ஆதரவு பேணி ஆண்டவன் அருள் ஆசிகள் அடைய வழி வகுப்போமாக.

கொரோனா என்ற தோஷம் நீங்கவும், எமைப் பற்றாமல் இருக்கவும் கை, கால், முகம், சூழல் சுத்தம் பேணல், எதிர்ப்புச் சக்தியுணவு, மூலிகைகள் உட்கொள்ளல், உடலுக்கு மேலும் உறுதி தேடல்கள் போல, மனச்சுத்தம், வாக்குச்சுத்தம், செயற்சுத்தம், பக்திச் சுத்தம், தர்மச் சுத்தம், அன்புச் சுத்தம், உறவுச் சுத்தம், ஒற்றுமைச் சுத்தம், பிறர் துன்பம் காணலில் சுத்தம் ஆகியன பேணி உலகம் உய்ய நாம் மானிடராகச் செயல்படின் தெய்வம் எம்முடன் உடன் நிற்க எம்மால் உயர் வாழ்வு வாழ முடியும்.

உண்மையே கடவுள், சாதுக்கள் அதைப் பல பெயர்களில் அழைக்கிறார்கள்.

Truth is God; Sages Call by Various Names

**(Swamy Ramakrishna Paramhamsar)**

*"எழுமின், உழைமின், உன் குறிக்கோள் அடையும் வரை உழைமின்"*

Awake; Arise; Work hard until your goal is Achieved

**(Swamy Vivekanandar)**

ஆகவே, ஆன்றோர் கூறிய அன்புக் கட்டளைகள், வார்த்தைகளை பின்பற்றி, உலகம் உய்ய உன்னத நெறி வழி நடந்து, நன்மை புரிந்து, துன்பம் நீக்கி, இன்ப வீடு எய்தி இந்த மானிடப் பிறப்பின் பெருமையை நிலைநாட்டுவோமாக!

*"அன்பே உலகம்" நாம் அனைவரும் குழந்தைகள்!*
*வாழ்க வளமுடன்*

**திருமதி பத்மா கஜேந்திரதாஸ்**
முன்னாள் அதிபர்
சைவமங்கையர் வித்தியாலயம்

# "அருள்மிகு வடிவாம்பிகை"

**-அனுபவப் பாடல்கள்-**

1. வடிவாம்பிகைத் தாயே
வடிவழகித் தாயே
வண்ண வண்ண
காட்சிகள் காட்டி
வழித்துணையாய் வருவாய்.

2. தேடாமல் அடைந்தேனம்மா
- உனை
வாடாமல் வழிபடுவேன்
- என்றும்
கூடாமல் கூடி விட்டாய் - உன்
கூட்டத்துள் கூட்டி விட்டாய்.

3. நடனம் புரிபவளே - அம்மா
நடராஜன் நாயகியே - உன்
நர்த்தனம் காட்டி என்னை
நந்தினியாக்கி விட்டாய்.

4. பக்தருக்கருளவென்று
மாயவனாற்றினிலே
- சின்னஞ்
சிறுமியாய் விளையாடி
சிலை வடிவானவளே.

5. லலிதாம்பிகையாக
காட்சி தந்தவளே - உனை
ஆயிரம் நாமங்களால்
பாடிப் பரவுகின்றேன்.

6. ஒருகையில் நெல்லுவட்டி
மறுகையில் கொமட்டி
குரல்வளையைத் தொட்டு
- என்னுள்
நாதத்தை எழுப்பிவிட்டாய்.

7. போர்ப்பறையும் நாற்படையும்
- எனை
சுற்றிவளைக்குதம்மா - உன்
நாதப்பறையையும்
ஞானவாளையும்
தந்து உதவிடுவாய்.

8. அச்சம் தந்தென்னை
அலைக்கழிக்கும் மாந்தர்
வலைக்குள் சிக்காமல்
காளியாய் காத்திடம்மா.

9. அற்புதங்கள் செய்து
அடியேனை காத்திடம்மா
ஆனந்த ரூபிணியே - உனை
அனுதினம் பாடுகின்றேன்.

10. கற்றைவார் சடையண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ண
கடைக்கண் காட்டிடம்மா
கருணாகரித்தாயே.

11. பணியணி சடையினார்
இடப்பாகம் கொண்டவளே
- என்
மனநலம் காப்பவனே - நல்ல
துணைநலம் தந்திடம்மா.

12. பூமாலை புனைந்து - உன்
புகழ்மாலை வரைந்து - நின்
திருவடி அலங்கரித்து
பாமாலை பாடி ...........

13. சைவத் திருமரபு
மேன்மையுற என்னை
காருண்யம் மிக்கவளே
கருவியாய் கொண்டிடம்மா.

14. பொய்மாயக் கடல் நீந்த
கை கொடுத்து உதவிடம்மா
- உன்
அருள் ஞானத் தேன் பருக
மிகுந்த ஆவலம்மா.

15. சுத்ததத்துவத்தில்
களிநடம் புரிபவளே
சுத்தமாயினால் - எனை
சுத்தாத்மாவாக்கிடம்மா.

16. பேரழகித்தாயே
மோன வடிவழகி
ஞானமழை பொழிவாய்
- உலகில்
ஞானம் மிகுந்திடவே

17. சரணம் சரணமம்மா
- உன்
சரணங்களின் கீழே
சரணாகதியாக
சதாகாலம் கிடந்திடுவேன்.

ஆக்கம் : **தேஜி**

# அஞ்சலி செலுத்துகின்றோம்
# இந்து மகளிர் பழைய மாணவிகள்



## திருமதி தயாநிதி செல்வநாயகம்
## திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்
## திருமதி பத்மா சோமகாந்தன்

சமீபத்தில் எம்மை விட்டு பிரிந்த, அன்பும் பண்பும்
பாசமும் நேசமும் நிறைந்த, உங்கள் ஆத்மா சாந்திக்காக
எல்லாம்வல்ல எம் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் அன்புச் சகோதரிகள்
(பழைய மாணவிகள், யாழ் / இந்து மகளிர் கல்லூரி
O.G.A. Colombo Branch)

# VISHALENI UMAAKAJAN'S
## PERFORMANCES IN CHESS.

## GRADE 8 STUDENT OF
# JAFFNA HINDU LADIES COLLEGE


01. $14^{th}$ Asian schools' chess championship - 2018 - participated.
02. $9^{th}$ Kandy open international rated chess championship 2018 - under 7 Girls Champion.
03. Sri Lanka national youth chess championship 2018 - Under 7 girls - Champion.
04. Asian youth chess championship – 2019 - under 8 girls - member of team Sri Lanka - 2nd runner up.
05. National youth chess championship -2019 - under 8 girls $1^{st}$ runner up.
06. FIDE world cadet chess championship - 2019 held in China - participated.
07. Western Asian youth & Junior Rapid chess championship - $4^{th}$ place.
08. Western Asian youth & junior Blitz chess championship - 2019 - $9^{th}$ place.
09. Colombo international Rating chess championship - 2019 under 8 girls equal first.
10. Sri Lanka national chess championship - 2019 under 9 girls - $2^{nd}$ runner up.
11. $16^{th}$ Asian schools' chess championship - 2022 -member of Sri Lanka team champion.
12. Sri Lanka schools' individual chess championship - super 30 - 2023 - $2^{nd}$ runner up. Selected to world schools chess championship held in Greece. But not participated.
13. National Youth Blitz chess championship - 2023 - under 12 girls - $2^{nd}$ runner up.
14. Western Asian juniors & girls chess championship 2023. Participated.





Western Asian Juniors & Girls Chess Championship -2023








Anqiu Welcomes you
智绘梦想

# நன்றி சொல்ல வேண்டும்

முதற் கண், எம்மைப் படைத்த ஈசனுக்கு நன்றிகள். அடுத்து, எம்மைப் பெற்று ஆரோக்கியமாக வளர்த்தெடுத்த அன்புப் பெற்றோருக்கு நன்றிகள். தொடர்ந்து எமக்குக் கல்வியூட்டிய நல் ஆசான்களுக்கு நன்றிகள்.

அடுத்து, இந்த "யாழ் நாதம்" சஞ்சிகையை உருவாக்க ஆக்கமும் ஊக்கமும் தந்த அன்பிற்குரிய எமது மன்றத் தலைவி திருமதி அபிராமி கைலாசபிள்ளை அவர்களுக்கு நன்றிகள். தொடர்ந்து இச்சஞ்சிகைக்குத் தரமான ஆக்கங்கள் தந்துதவிய, கல்விமான்களுக்கும், இந்த இதழை அழகாக, கச்சிதமாக, அச்சிட்டுத்தந்த "Unie Arts" நிறுவனத்திருக்கும் மற்றும் எமது மன்றத்து சகல அங்கத்தினருக்கும் எமது உளம் நிறைந்த மனம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

*"என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

*"யாழ் நாதம்" ஆசிரியை.*




DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD. COLOMBO 13. TEL: 011 2330195